Regd. No. 2975.

ஸ்ரீ:

# ஸ்ரீ ராமாநுஜன் 174

P. B. ANNANGARACHARYA, KANCHEEPURAM.

ஆசிரியர்: ஸ்ரீகாஞ்சீ. P. B. அண்ணங்கராசாரியர்.

வருடச் சந்தா ரூ. 5 ஜீவியச் சந்தா ரூ. 100.

ஜீவியச் சந்தாதாரர்களுக்கு பத்திரிகை சாச்வதமாக அனுப்பப்பட்டு வருவது தவிர 120 ரூபா விலையுள்ள புத்தகங்கள் உடனே அனுப்பப்படும்.

பேரருளாளன் பெருந்தேவித்தாயார் திருவடிகளே சரணம்.



ஆழ்வாரெம்பெருமானார் ஜீயர் திருவடிகளே சரணம்.

ஆழ்வார்கள் வாழி அருளிச்செயல் வாழி*
தாழ்வாது மில்குரவர் தாம்வாழி*—ஏழ்பாரு
முய்ய வவர்க ளுரைத்தவைகள் தாம் வாழி*
செய்யமறை தன்னுடனே சேர்ந்து.

---

சோபகிருது௵ ஆனிமீ 1963௵ ஜூலைமீ

http://acharya.org

# ஸ்ரீராமாநுஜன் 174

சென்னை ஸத்க்ரந்தப்ரகாசன ஸபா மூலமாக மாதந்தோறும் வெளிவரும் பத்திரிகை.

ஆசிரியர்: ஸ்ரீ காஞ்சீ. P. B. அண்ணங்கராசாரியர்.

| ஸம்புடம் 15 | 1963ஹு ஜூன் & ஜூலைமீ<br>சோபகிருதுஹு ஆனிமீ | ஸஞ்சிகை 6 |
|---|---|---|


## திருவாய்மொழி நூற்றந்தாதி-63

வெள்ளிய நாமங்கேட்டு விட்டகன்ற பின்மோகம் *
தெள்ளியமால் தென் திருப்பேர் சென்றுபுக—* உள்ளமங்கே
பற்றிநின்ற தன்மை பகரும் சடகோபற்கு*
அற்றவர்கள் தாமாழி யார்.

| | | | |
|---|---|---|---|
| வெள்ளிய நாமம் கேட்டு | போக்யமான பகவந்நாமங்களை தாய்சொல்லக் கேட்டதனால் | உள்ளம் அங்கே பற்றி நின்ற தன்மை பகரும் | தமது திருவுள்ளம் அவ்விடத்திலேயே பிரவணமானபடியை அருளிச்செய்த |
| மோகம் விட்டு அகன்ற பின் | மூர்ச்சை தெளிந்த பின்பு | சடகோபற்கு | ஆழ்வார் பக்கலிலே |
| தெள்ளிய மால் | ஸர்வஜ்ஞன ஸர்வேச்வரனுடைய (திருப்பதிகளுள் ஒன்றான) | அற்றவர்கள் தாம் | அற்றுத் தீர்ந்தவர்கள் [அநந்யார்ஹசேஷபூதர்கள்] |
| தென்திருப்பேர் சென்று புக | தென் திருப்பேரெயில் என்னுந் திருப்பதியில் போய்ப் பிரவேசிக்க | ஆழியார் | கம்பீரஹ்ருதயர்களாவர். |

* கங்குலும் பகலு மென்கிற கீழ்த்திருவாய்மொழியில் திருத்தாயாருடைய வாக்கிலே தோன்றிய சில திருநாமங்களைக் கேட்கப்பெற்ற ளவிலே மூர்ச்சை தீர்ந்தொழிய, உணர்ச்சிபெற்ற ஆழ்வார் தேன்திருப்பேரெயில் என்னும் திருப்பதியிலே சென்று சேரவேணு மென்கிற ஆசையை வெளியிட்டருளினர் * வெள்ளைச்சுரிசங்கு திருவாய்மொழியிலென்க. இப்பாட்டின் இரண்டாமடியில் "தென் திருப்பேர்" என்றே உலகமெங்கும் பாடம் வழங்கி வருகின்றது. சோழநாட்டுத் திருப்பதிகளுள் ஒன்றான அப்பக்குடத்தான் ஸன்னிதிக்கே தென் திருப்பேரென்று வியவஹாரம். அந்தத்திருப்பதி இங்கு விஷயமன்று. பாண்டி நாட்டுத் திருப்பதிகளுள் ஒன்றான தென்திருப்பேரெயில் என்னும் திருப்பதியே இங்கு விவக்ஷிதம். அந்தத்திருப்பதியை "தென்திருப்பேரை" என்று வழங்குவதுண்டு. ஆகவே "தென்பேரை" என்று பாடமிருந்திருக்கலாமென்பர் பெரியோர். "பேரை" என்பது திருநாமமன்றென்றும், "பேரெயில்" என்பதே திருநாமமென்றும் வியாக்கியானங்களினல் தேறுகின்றபடியால் ஏகதேசக்ராஹணமாகத் தென்திருப்பேர் என்றிருக்கத் தகுதியுண்டு. ஆழ்வார் திருவாக்கிலோ நம்பிள்ளை திருவாக்கிலோ பேரை யென்று வந்ததில்லை யாது.

(ஒரு சிறு குறிப்பு.) நாங்கூரை நாங்கை யென்றும், அழுந்தூரை அழுந்தையென்றும், தஞ்சாவூரைத் தஞ்சையென்றும், நெல்வேலியை நெல்லையென்றும், அயிந்திரபுரத்தை


http://acharya.org

அயிந்தையென்றும், த்வாரகாபுரியைத் துவரையென்றும் வழங்குதல்போலத் தென்திருப்பேரெயிற்பதியைத் திருப்பேரையென வழங்குதலும் பொருத்தமேயாகும். பிள்ளைப்பெருமாளையங்கார் நூற்றெட்டுத் திருப்பதியந்தாதியில் (52) "தென்திருப்பேரைப்பதியான்" என்று செய்யுளமைத்திருத்தல் காண்க. ஆனால் ஆழ்வார் திருவாக்கில் ஒரு பாசுரத்திலும் தென்திருப்பேரை யென்றதில்லை; 'தென்திருப்பேரெயில்' என்னும் முழுத் திருநாமமேயுள்ளது. அச்சுப்பிரதிகளில் பிழைகண்டால் திருத்திக்கொள்ளவேண்டும்.

கீழ்த்திருவாய்மொழியிலே ஆழ்வாருடைய ஆர்திபேச்சுக்கு நிலையல்லாபேயிருந்தது. பெரியபெருமாளுடைய திருக்குணங்களையும் வடிவழகு முதலானவற்றையும் பராங்குச நாயகியான தான் வாய்வெருவியும் திருத்தாயார் சொல்லக்கேட்டும் சிறிது தரிக்கும்படியாயிற்று. மோஹமும் தெளிந்தது. அவனைச்சென்று கிட்டியே தீர்வேன் என்னுமாற்றாமை பிறந்து, தென்திருப்பேரெயிலில் வீற்றிருந்த மகரநெடுங்குழைக்காதனிடம் போகவேணுமென்று புறப்பட, பழையபடியே தோழிமாரும் தாய்மாரும் சூழ்ந்துகொண்டு "உனக்கு இத்தனை ப்ராவண்யமாகாது; நமக்கு இது பழியாய் விளையும்" என்ன; நீங்கள் தடைசொல்லுகிறவற்றால் ஒருபயனுமுண்டாகமாட்டாது. நான் மகரநெடுங்குழைக்காதனாலே நெஞ்சுபறியுண்டேன்; ஆனபின்பு நானே போனதாகாமே நீங்கள் என்னோடு உடன்பட்டு அங்கே கொண்டுபோய்ச் சேர்க்கப் பாருங்கள் என்று, பராங்குச நாயகி தனக்குப் பிறந்த துணிவை அவர்களுக்குச் சொல்லுகிறதாகச் செல்லுகிறது * வெள்ளைச்சுரிசங்கு என்று தொடங்கும் திருவாய்மொழி.

திருக்குருகைப்பிரான் பிள்ளானுடைய ஆறாயிரப்படியில் அவதாரிகை பேரின்ப வெள்ளமாயிருக்கும். அந்த ஸ்ரீஸூக்திகள் பரமபோக்யமென்று அவையே ஈண்டு எடுத்துக் காட்டப் படுகின்றன:—"இப்பிராட்டியோடே பெரியபெருமாள் ஸம்ச்லேஷரஸத்தையநுபவித்து அந்த ஸம்ச்லேஷரஸம் உள்ளடங்காதபடி பெருகினவாறே அது ஸாத்மிக்கைக்காகவும் ஆச்ரிதப்ரதிகூலநிரஸநார்த்தமாகவும் தென்திருப்பேரெயிலே யெழுந்தருளத் திருவுள்ளத்தே கோலியருளி இவளுடைய ஸம்வாதார்த்தமாக இவளிடத்திலே அதிமாத்ரஸம்மானத்தைப் பண்ணியருளி தென்திருப்பேரெயிலிலே வேட்டைக்குப்போய் வருகிறோமென்றருளிச்செய்ய, இப்படி * பதிஸம்மாநிதையான விவள் அவ்யுத்பந்நவிச்லேஷையாகையாலும் இவனெழுந்தருளுகை இவனைக்காணுதொழிகைக்கு ஹேதுவென்னுமிடமறியாமையாலும் எழுந்தருள ஸம்வதித்து விஜயத்தை ஆசாஸித்து திவ்யாயுதங்களைக் கொடுத்தருளி * ஆத்வாரமநுவவ்ராஜ மங்களாந்யபிதத்யுஷீ * என்னும் ப்ரக்ரியையாலே திருப்பல்லாண்டு பாடிக்கொண்டு திருவணுக்கன் திருவாசலளவும் பின்னே யெழுந்தருள, பெரிய திருவடி திருத்தோளிலே யேறியருளி, ஒரு தாமரைத்தடாகம் மலர்ந்தாற்போலே யிருந்த திருக்கண்களாலே இவளைப்புரிந்து பார்த்தருளி இவளாலே அநுஜ்ஞாதனாய்த்தென்திருப்பேரெயிலிலே யெழுந்தருள, இவள் அவனைக்காணாமையாலே அத்யந்தம் அவஸந்நையாய் அவனெழுந்தருளியிருந்த தென்திருப்பேரெயிலிலே யெழுந்தருள உத்யோகிக்க, இவளுடைய திருத்தாயாரும், தோழிமாரும் மற்றுமுள்ள பந்துக்களும் இவளைப்ரதிபந்திக்க, 'நான் போகைதவிரேன், தனியே போனாளென்னும் பழி உங்களுக்கு வாராமே நீங்களே யென்னைத் தென்திருப்பேரெயிலிலே யீண்டெனக் கொண்டு போய்விடுங்கோளென்கிறாள்". என்று. (63)

http://acharya.org



காட்டு மன்னார் ஸன்னிதி ஸ்ரீ மந்நாதமுனிகள் மஹோத்ஸவத்தில் வித்வத்ஸதஸ்ஸு
முடிந்த பின் கோஷ்டியின் காட்சி 4—7—63

http://acharya.org

## காட்டுமன்னார் ஸன்னிதியில் ஸ்ரீமந்நாதமுனிகளின் மஹோத்ஸவச் சிறப்பு.

நம்முடைய ஸ்ரீவைஷ்ணவ தரிசனம் ஆழ்வார்களாலும் ஆசாரியர்களாலும் மேன்மை பெற்று விளங்குகின்றது. ஆழ்வார்களுள் நம்மாழ்வார் ப்ராதாந்யம் பெற்றதுபோல ஆசாரியர்களுள் ஸ்ரீமந்நாதமுனிகள் ப்ராதான்யம் பெற்றவர். பகவத்ராமாநுஜ தர்சனமென்றும் எம்பெருமானார் தர்சனமென்றும் நம்பெருமாள் நியமனத்தாலே வழங்குப்படியான பெருமைபெற்ற ஸ்வாமியெம்பெருமானாருடைய ப்ராதான்யத்தையோ, அவருடைய அபராவதார பூதரான மணவாளமாமுனிகளின் ப்ராதான்யத்தையோ இதனால் அபலபித்ததாக ஆகாது. “[illegible]………[illegible]” என்று வேதாந்தவாசிரியர் பணித்தபடி ஸ்ரீமந்நாதமுனிகளையே தலைவராகக் கொண்டது நம்தரிசனம். அவர் திருவவதரித்து மஹாப்ரயாஸங்கள் கொள்ளவில்லையென்றால் பின்னை ஆளவந்தார் எம்பெருமானார்போல்வாருடைய திருவவதாரமும் அவ்வளவு பயன்பட்டிராதென்றே சொல்லவேண்டியதாகும்.

நாதமுனிகள் தம் திருச்செவியில் யாத்ருச்சிகமாக விழுந்த *ஆராவமுதே யடியேனுடலம்* என்று தொடங்கும் திருவாய்மொழிப்பதிகமொன்றையே கொண்டு, இங்ஙனே ஆயிரம் பாசுரம் திருவவதரித்திருப்பதாக முன்னமறிந்து, பிறகு நாலாயிரம் பாசுரம் திருவவதரித்திருப்பதாகவுமறிந்து, நேரே ஆழ்வார் திருநகரிக்கெழுந்தருளி, ஆங்கே தமக்கு ஸதுபாயம் கூறினவரும் ஸ்ரீ மதுரகவி வம்சத்தவருமான ஒருபெரியார் உபதேசித்தருளின *கண்ணிநுண்சிறுத்தாம்பு திவ்யப்பிரபந்தத்தைத் திருப்புளியாழ்வாரடியிலே நியமபூர்வகமாகப் பன்னீராயிரமுறை ஜபித்து நம்மாழ்வாரை யோகதசையில் ஸாக்ஷாத்கரிக்கப்பெற்று “நாதனுக்கு நாலாயிரமுரைத்தான் வாழியே” எனவழங்கும் நம்மாழ்வாருடைய வாழி திருநாமத்தின்படி அவர் பக்கலிலே நாலாயிர திவ்யப்பிரபந்தங்களைப்பெற்று, தேவகானகுசலர்களும் தம்முடைய ஸாஹிநேயர்களுமான மேலையகத்தாழ்வார், கீழையகத்தாழ்வார் என்னுமிருவர் மூலமாக அத்திவ்யப் பிரபந்தங்களை இந்நிலவுலகில் பரவச் செய்தருளின பெருமை நாதமுனிகளுக்கு அஸாதாரணமாகவன்றோ விளைந்தது. இவ்வேற்றத்தை உட்கொண்டன்றோ மணவாளமாமுனிகள் உபதேசரத்தினமாலையில் “அருள்பெற்ற நாதமுனி” என்றருளிச்செய்தது.

இப்பேராசிரியர்க்கு திவ்யதேசமெங்கும் திருநக்ஷத்ரோத்ஸவ பரிபாலனம் நடைபெற்றாலும் திருவவதாரஸ்தலமான காட்டுமன்னார் ஸன்னிதியிலே நடைபெறுவது விசேஷமல்லவா? இதைப்பற்றி முன்னிதழில் பவிஷ்யத்தாகத் தெரிவித்திருந்தோம். அவ்வண்ணமாகவும் அதற்குமேம்பாடாகவும் நடைபெற்றதை இங்குச் சுருக்கமாகத் தெரிவிக்கிறோம். ஆனிமீ 9௨ (23—6—63) ஞாயிற்றுக்கிழமையன்று திருப்பல்லாண்டு தொடக்கமாகி மறுநாள் (24—6—63) திங்கட்கிழமை உத்ஸவாரம்பமாயிற்று. தினப்படி காலை மாலை யிருவேளையிலும் திருவீதிப் புறப்பாடு, பகலில் அலங்காரத் திருமஞ்சனம் ஸேவை சாத்துமுறைகள், லோகோத்தரமான ததீயாராதனம், இரவு திருவீதிப் புறப்பாட்டின் பிறகு திருவாய்மொழிஸேவை சாத்துமுறை இத்யாதி வைபவங்கள் விலக்ஷணமாக நடந்தேறின. உள்ளூர் ஸ்வாமிகளும், வெளியூர்களிலிருந்து எழுந்தருளப்பண்ணப்பட்ட ஸ்வாமிகளும் உபயவேத கோஷ்டிகளையும் சிறப்புற நடத்தினார்கள்.

http://acharya.org

தேவஸ்தான தர்மகர்த்தாக்களில் ஒருவரான ஸ்ரீ. உ. வே. C. பார்த்தஸாரதி ஐயங்கார் ஸ்வாமியும், சித்ரகூடம் வித்வான் அஷ்டகோத்ரம் வேங்கடாசாரியர் ஸ்வாமியும் நெடுநாளாக விசேஷோத்ஸாஹத்துடன் பாரித்திருந்தபடி உத்ஸவாந்தத்தில் மூன்று நாட்களில் நான்கு வேளைகள் வித்வத்ஸதஸ்ஸு விபவமாக நடந்தேறியது இந்த ஸம்வத்ஸரத்திற்குத் தன்னேற்றம். ஸ்ரீமத்பரமஹம்ஸேத்யாதி. காஞ்சீ வாதிகேஸரி அழகியமணவாளராமாநுஜஜீயர் மடாதிபதியான ஸ்ரீ. யதீந்த்ரப்ரவண ராமாநுஜ ஜீயர் ஸ்வாமிகள் எழுந்தருளியிருந்து வித்வத்ஸதஸ்ஸுக்கு அக்ராஸனமலங்கரித்தருளினது ஸதஸ்ஸுக்கு மிகுந்த சோபையை விளைத்தது. அடியேனும் அங்கு (முடிவில்) மூன்று நாள் விடைகொண்டிருந்து ப்ரஹ்மானந்தமெய்தினேன். ஸ்ரீமந்நாதமுனிகளின் பெருமைகளில் ஆளவந்தார் ஈடுபட்டு அருளிச்செய்தவற்றையும், நாதமுனிகள் வகுளபூஷணபாஸ்கரர் பெருமையிலும் த்ராவிடவேதஸாகரப்பெருமையிலுமீடுபட்டு அருளிச்செய்தவற்றையும் பற்றி விஜ்ஞாபித்துக்கொண்டேன். ஸ்ரீ. உ. வே. ந்யாயவேதாந்த வித்வான் (திருநாராயணபுரம்) அக்காரக்கனி ஸம்பத்குமாராசாரியர் ஸ்வாமி ஸ்ரீமந்நாதமுனிகளருளிச்செய்த ந்யாய தத்வ மங்கள ச்லோகத்தை யவலம்பித்து வேதாந்த விழுப்பொருள்களை உபந்யஸித்தார். கோயில் வியாகரண வேதாந்த வித்வான் ஸ்ரீ. உ. வே. தி. அ. சதாபிஷேகாசாரியர் ஸ்வாமி இராமாநுசநூற்றந்தாதியில் * ஆரப்பொழில் தென்குருகைப்பிரான்..................நாதமுனியை நெஞ்சால்வாரிப்பருகு மிராமாநுசன் * என்கிறபாசுரத்தினால் அமுதனார் அருளிய அர்த்தவிசேஷங்களை விரியவுரைத்தார். உ. வே. சித்ரகூடம் வித்வான். வேங்கடாசாரியர் ஸ்வாமி ஸமயாநுகுணமான இன்சுவையுபந்யாஸத்தைப் பெய்தார்.

இந்த உபந்யாஸங்களெல்லாம் தனிப்புத்தகமாக வெளிவந்து எங்கும் பரவவேணுமென்று கார்யநிர்வாஹகர்களின் மனோரதம் காண்கிறது. ஸதஸ்ஸின் அவஸானத்தில் வித்வான்களுக்கும் உபயவேதாதிகாரிகளுக்கும் மற்றும் கைங்கர்யபரர்களுக்கும் விசேஷ ஸன்மானங்கள் வழங்கப்பட்டன. .... .... ... (*)

## சந்தாசேலுத்திய பெரியார்கள்

76. ஆழ்வார்திருநகரி R. P. ராமையங்கார்
77. ,, P. R. ஸ்ரீனிவாஸாசாரியர்.
78. மதுரை S. பத்மநாபையங்கார்.
79. மாறம்பட்டி S. A. முகுந்தராமாநுஜர்
80. நடையனேரி கிருஷ்ணராமாநுஜதாஸர்.
81. கோவை கண்டாக்டர் R. ஸுந்தரராஜய்யங்கார்.
82. Bombay A. S. Ramayyangar
83. ,, Srinivasan, GrindlaysBank.
84. டெங்கணிகோட்டை கிடாம்பி ஸ்ரீனிவாஸய்யங்கார்.
85. காஞ்சீபுரம் K. S. விஜயராகவாசாரியர்
86. ஈரோடு T. V. Srinivasachariar, Advocate.
87. Waltair P. S. Srinivasachariar.
88. தென்திருப்பேரை K. M. ராமாநுஜய்யங்கார்
89. கண்ட்ரமாணிக்கம் R. Rangarajan.
90. Madras M. Rangaswami Iyengar.
91. ,, K. Srinivasaraghavachar, T. Nagar.
92. ,, M. S. நடராஜ செட்டியார் G.T.
93. ,, A. Kothandaramaraja ,,
94. ,, M. E. Alwar Mudaliar. ,,
95. ,, R. Natarajan fort
96. ,, S. Amudachar, Triplicane.
97. ,, N. R. Murugavel M.A., M.O.L. திருக்கோயில் பத்ராதிபர்.
98. , D. K. Sudarsanam M.A. B.T. Pachur.

http://acharya.org



காட்டு மன்னார் ஸன்னிதி நாதமுனிகள் மஹோத் ஸவத்தில் வரவேற்பு 2—7—63

http://acharya.org

## ஸ்ரீலஸ்ரீ சிவானந்த சுவாமிகள் ஸித்தியடைந்தார்கள்.

ஹ்ருஷீகேசத்தில் பரமபவித்திரமான கங்கைக் கரையில் மஹாதபஸ்வி யென்று உலகமெல்லாம் போற்றும்படியாகவிருந்த சிவானந்த ஸரஸ்வதியவர்களை அறியாதாரில்லை. தென்னாட்டில் திருநெல்வேலிப்பக்கத்திலிருந்து பலவருடங்களுக்கு முன்பு ஹ்ருஷீகேசம் சென்று சேர்ந்து அங்கு அதிமாநுஷக்ருத்யங்களைச் செய்து பெரும்புகழ்படைத்த இப்பெரியாரின் வியோகம் ஆஸ்திகர்களுக்கு அத்யந்த சோசநீயமாகும். இவருடைய பழக்கம் நமக்குப் பெரிதுமுண்டு. ஸஹவாஸயோக்யர்களான ஸாத்விகர்களில் தலைமைபெற்று விளங்கின யோகிச்ரேஷ்டர் இவர் என்னத் தட்டில்லை. ... ... *

## பகவத்கீதையும் ஆழ்வார்களும்.

ஸ்ரீராமாநுஜன் சென்ற இதழில் (173ல்) நாம் வெளியிட்டிருந்த "ஆழ்வார்கள் புகழ்ந்த கண்ணன்" என்னுங் கட்டுரையில் கண்ணன் கீதையை யருளிச்செய்ததாக ஸூஸ்தாவமே காணவில்லையே யென்று சில பெரியார்கள் தெரிவித்து, "கீதை நவீநகல்பிதம் என்கிற வ்வாதம் இதனால் ஊர்ஜிதமாகிறது போலும்" என்று மெழுதியிருந்தார்கள். அவர்களுக்கு ஸமாதானம். கீதை நவீந கல்பிதம் என்கிற வ்வாதம் இதுகாறும் நம்செவியில் விழுந்ததில்லை. அந்த வ்வாதத்தை ஆஸ்திகர்கள் அநுவதிப்பதும் அநுசிதம். ஆழ்வார்கள் கீதையைப்பற்றி திவ்ய ப்ரபந்தங்களில் பலவிடங்களில் ப்ரஸ்தாபித்துள்ளார்கள், ஆசார்ய ஹ்ருதயத்தில் "பகவன் ஞானவிதி பணிவகையென்று இவரங்கீகாரத்தாலே அதுக்கு (கீதைக்கு) உத்கர்ஷம்" என்கிற சூர்ணையின் மணவாள மாமுனிகளின் வியாக்கியானம் ஸேவிக்கத்தக்கது. "அறிவினால் குறைவில்லா அகல் ஞாலத்தவரறிய, நெறியெல்லாமெடுத்துரைத்த நிறைஞானத்தொருமூர்த்தி" என்கிற திருவாய்மொழிப் பாசுரத்தை * ஆழ்வார்கள் புகழ்ந்த கண்ணனில் (648) நாமெடுத்துக் காட்டியுமிருக்கிறோம். திருமழிசைப்பிரான் நான்முகன் திருவந்தாதியில் "ஆயன் துவரைக்கோனாய் நின்றமாயன் அன்றோதிய வாக்கு" என்று ஸுஸ்பஷ்டமாகவே கீதையைப் பேசியுள்ளார். .... ... *

---

## ஓர் அறிவிப்பு.

25 ஆண்டுகட்கு முன்பு நாம் ஸ்ரீமத் வேதாந்த தேசிக க்ரந்தமாலையை தேவநாகர லிபியில் பூர்த்தியாக வெளியிட்டோ மென்பது உலகமறிந்ததே. அதில் சில ஸம்புடங்கள் புநர்முத்ரணம் செய்யவேண்டிய நிலைமைக்கு வந்து துர்லபங்களாய்விட்டன வென்பதைச் சென்ற வருஷத்தில் பிரசுரம் செய்திருந்தோம். ஸ்தோத்ராவளீ விபாகமும் காவ்யநாடக விபாகமும் மட்டுமே கிடைக்கக்கூடியவை யென்றும் வெளியிட்டிருந்தோம். இப்போது வியாக்கியான விபாகத்திலும் சில பிரதிகள் கிடைத்திருக்கின்றன வென்பதைத் தெரிவித்துக் கொள்ளுகிறோம். இது ஒரே ஸம்புடமாகச் சிறந்த பயிண்டு செய்யப்பட்ட பெரிய புத்தகம். இதிலுள்ள கிரந்தங்களாவன — ஈசாவாஸ்யபாஷ்யம், ஸ்தோத்ர ரத்னபாஷ்யம், சதுச்ச்லோகீ பாஷ்யம், கத்யத்ரபாஷ்யம், கீதார்த்த ஸங்க்ரஹரக்ஷா, கீதாபாஷ்ய தாத்பர்ய சந்த்ரிகா, தத்வடீகா, நிக்ஷேபரக்ஷா, ஸச்சரித்ர ரக்ஷா, ஸ்ரீபாஞ்சராத்ரரக்ஷா, பூகோள நிர்ணயம், வைச்வதேவகாரிகை. ஆக இத்தனை புத்தகங்களும் சேர்ந்த ஸம்புடத்தின் விலை 24 ரூ. அபேக்ஷையுள்ளவர்கள் க்ரந்தமாலா ஆபீஸுக்கு எழுதிக்கொள்ளலாம். லாரிமூலமாகவோ, ரைல்வே பார்ஸல் மூலமாகவோ அனுப்பப்படும். அதிகரண ஸாராவளீ, சததூஷணீ, நியாயஸித்தாஞ்ஜநம், நியாய பரிசுத்தி, மீமாம்ஸாபாதுகை, ஸேச்வர மீமாம்ஸை தத்வமுக்தாகலாபம் ஸர்வார்த்த ஸித்தி இவை கிடைக்கமாட்டா. .... ... *



http://acharya.org

நல்வார்த்தை நானூறு—முன் தொடர்ச்சி.

79. கோதா ஸ்துதியில் "भोक्तु तव प्रियतमं भवतीव गोदे" (போக்தும் தவ ப்ரிய தமம் பவதீவ கோதே!) என்கிற எட்டாவது சுலோகம் ஆண்டாள்தான் ஆழ்வார்களுக்கும் வழிகாட்டியா யிருந்தவளென்று தெரிவிக்கின்றது. இந்த ச்லோகத்தின் கருத்தாவது. ஆண்டாளே! உம்முடைய திருத்தகப்பன்மார்களான பெரியாழ்வார் முதலிய ஆழ்வார்கள் உமது வல்லபரான பெருமாளை நீர் அநுபவிப்பது போலவே தாங்களும் அநுபவிக்க விரும்பித் தங்களுடைய பக்தியை அநுராக சைலியிலே மாற்றிப் பேசா நின்றவர்களாய்ப் பலவகைப்பட்ட ஸம்ச்லேஷ விச்லேஷப் பாசுரங்களினால் தமது திருவுள்ளத்தை ச்ருங்கார ரஸாநுபவசாலியாக ஆக்கிக்கொள்ளுகிறார்கள் என்பதாம். ஆண்டாள் இயற்கையாகப் பெண்ணாய்ப் பிறந்தவள்; புருஷனைப் புருஷர்கள் அநுபவிப்பதிற் காட்டிலும் பெண்டிர் அநுபவிப்பது பாங்குடைத்தாதலால் புருஷோத்தமனான பெருமாளை ஸ்த்ரீரத்னமான ஆண்டாளனுபவிப்பது பாங்காக அமைந்தது. அமையவே, இவளுடைய திவ்யப்ரபந்தத்தில் "ஊனிடை யாழி சங்குத்தமற்கென்று உன்னித் தெழுந்த வென்தட முலைகள்" என்றும் "கொங்கைமேல் குங்குமத்தின் குழம்பழியப் புகுந்தொரு நாள், தங்குமேல் என்னாவி தங்கு மென்றுரையீரே" என்றும் "கொள்ளும் பயனொன்றில்லாத கொங்கை தன்னைக் கிழங்கோடும், அள்ளிப் பறித்திட்டவன் மார்பி லெறிந்து என்னழலைத் தீர்வேனே" என்றும் "கொம்மை முலைக ளிடர்தீர" என்றும் உள்ள பாசுரங்கள் பொருத்தமாகவும் ஸஹ்ருதய ஹ்ருதயங்கமமாகவும் விளங்கின. "இங்ஙனம ஆண்டாளைப் போலவே புருஷோத்தமனை நாமும் அநுபவிக்கவேணும், நாமும் பாசுரமிட்டுப் பேசவேணும்" என்று ஆசைகொண்ட ஆழ்வார்கள் என்செய்தார்க ளென்னில், பரமபுருஷ விஷயத்திலே தங்களுக்குண்டான பக்தியை நாயக விஷயத்தில் நாயகிகளுக் குண்டாகும் அநுராகத்தின் ஸமாதியிலே அமைத்து, தாங்களும் ஸ்த்ரீபாவனை கொண்டவர்களாகி எம்பெருமானோடு ஸம்ச்லேஷிப்பதும் விச்லேஷிப்பதுமான நிலைமையையும் எய்தி, அந்த ஸம்ச்லேஷ விச்லேஷங்களுக்கு அநுரூபமான பாசுரங்களையும் பேசி, இங்ஙனே தங்களுடைய ஹ்ருதயத்தையும் ச்ருங்கார ரஸைகதானமாக ஆக்கிக்கொண்டார்கள் என்றதாயிற்று. இத்தால், அநுகார ரீதியிலே அமைந்த ஆழ்வார்களின் பகவதநுபவத்திற் காட்டிலும், தன் இயற்கைக்கு இணங்கினதாகவே அமைந்த ஆண்டாளுடைய பகவதநுபவம் ரஸவத்தரம் என்பது பெறப்படும்.

80. கோதா ஸ்துதியில் சூடிக்கொடுத்த சுடர்க் கொடியின் திருக்குழற் பெருமையைப் பல சுலோகங்களிற் பேசியிருந்தாலும் "तातस्तु ते मधुभिदः स्तुतिलेशवश्यात्—தாதஸ்து தே மதுபித: ஸ்துதிலேசவச்யாத்" என்கிற பத்தாவது சுலோகம் மிக மேம்பட்டது. இந்த ச்லோகத்தின் கருத்தாவது, ஆண்டாளே! உம்முடைய திருத்தகப்பனாகிய பட்டர்பிரான், ஸ்வல்ப ஸ்தோத்திரத்திற்கு வசப்படக் கூடியவனான எம்பெருமானிடத்தில் நின்றும் செவிக்கினிய செஞ்சொற்களை நூற்றுக்கணக்காகப் பாடின மற்றை யாழ்வார்களாலே முன்பு அடையப்படாததான பெரியாழ்வாரென்னும் சிறப்புப் பெயரை, நீர் சூடிக்களைந்த மாலையை ஸமர்ப்பித்ததனால் அடைந்தார் என்பதாகும். ஆழ்வார்களுக்குள்ளே ஆண்டாளுடைய திருத்தகப்பனான பட்டர்பிரான் பெரியாழ்வாரென்று வழங்கப்படா நின்றார். இவ் வாழ்வார்க்கு எந்த அம்சத்தினால் பெருமை என்று ஆராயவேணும். மற்றுள்ள ஆழ்வார்களுக்கு முன்னே வந்துதித்தவர்களான முதலாழ்வார்களும் திருமழிசைப்பிரான் நம்மாழ்

http://acharya.org

வார் முதலானவர்களும் இவரைக் காட்டிலும் திருநக்ஷத்திரத்தில் பெரியவர்களாதலால் வயதினல் பெருமை இவர்க்குச் சொல்லவொண்ணது. இனி எண்ணிக்கையில் அதிகமான பாசுரங்களை அருளிச் செய்வதனுலாம் பெருமையாவது சொல்லத் தகுமோவென்று பார்க்கில், அவ்விஷயத்தில் நம்மாழ்வாரும் திருமங்கையாழ்வாருமே பெருமை பெற்றவர்களாவர். ஆகவே, எக்காரணத்தினல் இப்பட்டர்பிரானுக்குப் பெரியாழ்வாரென்ற பெயர் வழங்கலாயிற்றென்று உணரவேண்டுவது அவசியமாயிற்று. ஆண்டாள் சூடிக் களைந்த பூமாலையை இவ்வாழ்வார் எம்பெருமானுக்கு நாடோறும் ஸமர்ப்பித்து வந்ததனுல் மிகவும் திருவுள்ள முவந்த எம்பெருமான் இவர்க்குப் பெரியாழ்வார் என்று விருது உண்டாகும்படி அருள் புரிந்தனன்—என்கிறது இந்த ச்லோகத்தில். இந்த ச்லோகத்தில் இரண்டாவது பாதத்தை "கர்ணம்ருதை: ஸ்துதிசதை:" என்று வ்யஸ்தமாக ஓதிவருகிருர்கள்; இது புராதன பாடமன்ற. "கர்ணம்ருத ஸ்துதிசதை:" என்று ஸமஸ்தமாகவே ஆசிரியர் பணித்தது. அது பஹுவ்ரீஹி கர்ப்பமான பதமென்பதை யுணராமல் இங்கு கர்மதாரய ஸமாஸமென்றெண்ணி ஸமஸ்தமா யிருப்பதிற் காட்டிலும் வ்யஸ்தமா யிருப்பதே யுக்ததரமென்றெண்ணி "கர்ணம்ருதைஸ் ஸ்துதிசதை:" என்று திருத்திவிட்டார்கள். நம்முடைய தேசிக க்ரந்தமாலா ஸ்தோத்ராவளீ விபாகப் பதிப்பிலும் அப்பாடத்தையே நிவேசித்திருக்கிருேம். ஆனல் அது ஆசிரியருகந்த பாடமன்று என்பதை நம்முடைய கோதாஸ்துதி வியாக்கியானத்தில் நிரூபணம் செய்திருக்கிருேம். இங்கு ஸாரமாகத் தெரிவிக்கிருேம். "கர்ணம்ருதானி ஸ்துதிசதானி யேஷாம் தே - கர்ணம்ருத ஸ்துதி சதா: தை: என்று விக்ரஹமாகக் கடவது. கர்ணம்ருதமான ஸ்துதிசதங்களைப் பாடின மற்றை யாழ்வார்களாலும் [நம்மாழ்வாராலுங் கூட] அடையப்படாததான அநுக்ரஹத்தை இவ்வாழ்வார் பெற்ருர் என்பது இங்கு விவக்ஷிதம். *இன்கவி பாடும் பரம கவிகளென்று சிறப்பித்துக் கூறப்பட்ட முதலாழ்வார்களுக்கும் *பாலேய் தமிழரிசை காரர் பத்தர் பரவு மாயிரம்* தொண்டர்க் கமுதுண்ணச் சொன்மாலைகள் சொன்னேன்* என்றும் சொல்லுகிறபடியே கர்ணம்ருத ஸ்துதி ததிகளைப் பாடின நம்மாழ்வார்க்கும், மற்றும் இத்தகையரான திருமழிசைப்பிரானுக்கும் குலசேகரப் பெருமாளுக்கும் கிடைக்காததான அநுக்ரஹத்தை ஆண்டாள் சூடிக்களைந்த மாலையை யுபஹரித்தது காரணமாக இவ்வாழ்வார் பெற்ருர் என்பதுதான் இன்சுவைமிக்க பொருள். இப்பொருளுக்கு வ்யஸ்த பாடம் சேராது; ஸமஸ்தமான பாடமே சேரும். அன்றியும் வ்யஸ்தமான பாடத்தில் ப்ரபலமானவொரு அநுபபத்தியுமுண்டு; பெரியாழ்வார் தம்முடைய திவ்ய ஸூக்திகளை யெல்லா மருளிச் செய்த பிறகே ஆண்டாள் சூடிக்களைந்த மாலையை வடபெருங் கோயிலுடையானுக்கு ஸமர்ப்பித்ததாக வ்யஸ்த பாடத்தில் ஏற்படும். அது அஸங்கதம். பெரியாழ்வார் திருமொழியில் (2—2—6) *மின்னனைய நுண்ணிடையார் விரிகுழல்மேல் நுழைந்த வண்டு இன்னிசைக்கும் வில்லிபுத்தூ ரினிதமர்ந்தாய்!* என்கிற பாசுரத்தில் வ்யாஜமாக ஸூசிதமான ஆண்டாளிதிஹாஸம் முற்பட்டதே யொழியப் பிற்பட்டதன்று.

## இனி, பரந்த ரஹஸ்யத்தைப்பற்றின இருபது வார்த்தைகள்.

(முகவுரை.) நம்முடைய ஸம்ப்ரதாயத்தில் மிகச் சிறந்த ரஹஸ்யக்ரந்தமாகக் கொண்டாடப்பட்டு வருகின்ற பரந்த ரஹஸ்ய மென்னும் திவ்ய க்ரந்தத்தைப் பணித்தவர் ஆச்சான் பிள்ளை என்றுபலவிடங்களிலும் நம்மணவாளமாமுனிகள் அருளிச்செய்திருப்பதைக் கண்டிருந்த அடியேன் பெரியவாச்சான்பிள்ளையையே ஆச்சான்பிள்ளையென்று அருளிச் செய்திருக்கிறரென்று பலநாள் கொண்டிருந்தேன். இந்தக் கொள்கை அடியேனுக்கு வெகு திடமாக



http://acharya.org

அமைந்திருந்தது. அடியேனுக்கு மாத்திரமல்ல; மற்றும் சில பெரியோர்களுக்கும் இந்த நினைவே ஊர்ஜிதமாயிருந்தது. இதில் ஏதோ உண்மைக்கு மாறுபாடிருக்கின்றதென்று நெஞ்சில் தோன்றாமையாலும் தோன்ற ப்ரஸக்தியுமேற்படாமையாலும் இதில் அடியோடு ஆராய்ச்சி செய்திலேன். ஆராய்ச்சி யுண்டாகி உண்மை தெளிந்த பின்பு அவ்வுண்மையை ஒளிக்க மனமில்லாமையாலும் அப்படி யொளிப்பது ஆத்மத்ரோஹமாகுமாகையாலும் இதனை வெளியிட்டே தீரவேணுமென்று தோன்றி "ஸ்ரீ ராமாநுஜன்" ஏழாவது பகுதியில் சுருக்கமாக வெளியிட்டேன். அதாவது பரந்தரஹஸ்யம் ஆச்சான்பிள்ளையின் க்ருதியே யன்றிப் பெரிய வாச்சான்பிள்ளையின் க்ருதியன்றென்று வெளியிட்டேன். உண்மையை நன்குணர விரும்பிய மஹான்களுக்கு விரிவு அபேக்ஷிதமானமையை யறியப் பெற்றேனாதலால் உலகுக்கு மஹோபகாரம் செய்ய உத்ஸாஹங்கொண்டு பின்பு அதைப்பற்றி விளக்கமாகச் சிலநூல்கள் வெளியிட்டேன். அவற்றின் சில ஸாராம்சங்களை ஈண்டு இருபது வார்த்தைகளால் ஸங்க்ரஹிக்கத் தொடங்குகிறேன். இந்த வார்த்தா மாலையில் இது சேர்ந்திருக்க வேண்டுவது அவசியம்.

81. விசதவாக் சிகாமணிகளான மணவாளமாமுனிகளின் வியாக்கியானங்களிலேயே ஆச்சான்பிள்ளை யென்கிற திருநாமத்தையும் அவருடைய ஸ்ரீஸூக்திகளின் உதாஹரணங்களையும் மிக மிகக் காண்கிறோமாதலால் மாமுனிகளின் திருவுள்ளத்தை உள்ளபடி நிஷ்கர்ஷிப்பதே முதன்மையான காரியம். உபதேச ரத்தினமாலையில் நாற்பத்தாறாவது பாசுரம் * பெரியவாச்சான்பிள்ளை பின்புள்ளவைக்குந் தெரிய * இத்யாதி. இங்குப் பிள்ளைலோகஞ்சீயர் வியாக்கியானத்தில் (பெரியவாச்சான் பிள்ளை) என்று ப்ரதீகக்ரஹணம் பண்ணி "அவர் குமாரரான நாயனாராச்சான்பிள்ளையும் நாலூராச்சான்பிள்ளையும் உண்டாகையாலே பெரிய வாச்சான்பிள்ளை யென்று விசேஷிக்கிறது" என்றுரைக்கப் பட்டுள்ளது. இதனால் அக்காலத்தில் ஆச்சான்பிள்ளையென்கிற திருநாமம் மூவர்க்கு வழங்கி வந்ததென்று நன்கு தெரியலாகிறது. ஒருவர்க்குப் பெரிய என்று விசேஷணம்; இன்னொருவர்க்கு நாயனார் என்று விசேஷணம்; மற்றொருவர்க்கு நாலூர் என்று விசேஷணம்—ஆக இம்மூன்று விசேஷணங்களோடு கூடிய ஆசிரியர்கள் மூவரிருந்தார்கள். நியமேந விசேஷணத்தைப் புரஸ்கரித்தே வழங்குவதென்கிற நிர்ப்பந்தமில்லாமையால் விசேஷணத்தை விட்டும் வழங்கி வந்தார்கள். நம்பி, ஆண்டான், பிள்ளை என்பது முதலான பல பல திருநாமங்கள் இந்தவகுப்பில் சேரும். திருக்கச்சிநம்பி, பெரிய நம்பி, திருமலை நம்பி; திருக்கோட்டியூர் நம்பி, மணக்கால் நம்பி, மணற்பாக்கத்து நம்பி........ என்றிப்படி பல நம்பிகளுளர். இவர்களை விசேஷித்து நிர்தேசித்திருக்குமிடங்களுமுண்டு; அவிசேஷேண நம்பி யென்றே நிர்தேசித்திருக்குமிடங்களுமுண்டு. திருமாலையாண்டான், முதலியாண்டான், பெரியாண்டான், கந்தாடையாண்டான்;—நம்பிள்ளை, வடக்குத் திருவீதிப்பிள்ளை, திருவாய்மொழிப்பிள்ளை இத்யாதி வ்யபதேசங்களும் மிகமிகக் காண்க. இத்தகைய திருநாமங்களை அவிசேஷேண நிர்தேசித்துவிட்டாலும் * அர்த்தாத் ப்ரகரணாத் லிங்காத் ஔசித்யாத் அர்த்த நிர்ணய: * என்ற கட்டளையிலே விசேஷவ்யக்திபோதம் ஸம்ப்ரதாயஜ்ஞர்களுக்கு உண்டாகிறது. எம்பெருமானார் வைபவத்தை வாசித்துக் கொண்டு போம்போது அதில் பெரும்பாலும் எல்லா நம்பிகளுடையவும் ப்ரஸ்தாவம் வருகிறது. திருக்கச்சிநம்பி வ்ருத்தாந்தம் வரும்போது முதன்முதலாக ஒன்றிரண்டிடங்களில் திருக்கச்சிநம்பி யென்றே யெழுதிவிட்டு, மேலே அந்தத் திருநாமத்தை அடிக்கடி குறிக்க வேண்டிவந்தால் நம்பி என்றே குறிப்பது; திருக்கோட்டியூர் நம்பி வ்ருத்தாந்தம் வந்தாலும் அப்படியே. திருமலை நம்பி வ்ருத்தாந்தம் வந்தாலும் அப்படியே. ஓரிடத்தி

http://acharya.org

றுமே விசேஷ நிர்தேசம் பண்ணுமலிருக்கிற வழக்கம் நம்முடையவர்களின் க்ரந்தங்களில் கண்டதில்லை. அது யுக்தமானசைலியுமன்று. மணவாளமாமுனிகளுக்கு விசதவாக்சிகாமணி யென்கிற விருது அஸாதாரணமானது. மயங்கவைத்து அருளிச்செய்கிற வழக்கம் அவரிடமில்லை. பெரியவாச்சான்பிள்ளையை நிர்தேசிக்க வேணுமானல் ஆச்சான் பிள்ளையென்று ஸாமாந்யத: [விசேஷணத்தைவிட்டு] நிர்தேசிக்கிற வழக்கம் மாமுனிகள் பக்கலில் கண்டதில்லை. இது ஸர்வாத்மநா அஸம்பவி.

82. மாமுனிகளுக்குப் பெரியவாச்சான்பிள்ளை பக்கலில் உள்ள கௌரவபுத்தி அளவிடமுடியாதது. உபதேச ரத்தினமாலையில் திருநாம ப்ரஸித்தி தெரிவதற்காக மூன்று பாசுரங்களில் பெரியவாச்சான்பிள்ளை யென்று பெயரையிட்டுக் கூறினாராயினும் மற்றவிடங்களில் அப்பேராசிரியரைக் குறிக்க வேண்டுமிடத்துப் பெரும்பாலும் பெயரையிட்டுக் கூறுவதில்லை; இரண்டு மூன்றிடங்களைக் காட்டுகிறோம் காண்மின். ஆசார்ய ஹ்ருதயத்தில் அதனுசிரியர் அருளிச் செயல் சந்தைகளை யெடுக்கும்போது சிலவிடங்களில் பெரியவாச்சான்பிள்ளையின் வியாக்கியானத்தில் அருளிச்செய்துள்ள அர்த்தத்திற் காட்டில் வேறுபட்ட அர்த்தத்தைத் திருவுள்ளம்பற்றியுள்ளார். அப்படிப்பட்ட விடத்து வியாக்கியானத்தில் பெரியவாச்சான்பிள்ளை பணித்த பொருள் இன்னவிதமென்று காட்டியருளத் திருவுள்ளம்பற்றிய மணவாள மாமுனிகள் அவ்விடங்களில் எவ்விதமாக அருளிச் செய்துள்ளாரென்பதைச் சிறிது நோக்கவேணுமாரியர்கள். அதில் முதல்சூர்ணையில் "நீர்மையினல்" என்றதற்கு மூன்றுவகைப் பொருள் பணித்து ஒவ்வொரு பொருளுக்கும் நியாமகம் ஸாதிக்கையில் "பூர்வயோஜநை * நீர்மையினு லென்கிறதுக்குப் பூர்வர்களிட்ட வ்யாக்யானத்துக்குச் சேரும்" என்றருளிச் செய்தார். அதாவது, பெரியதிருமொழியில் (2-8-5) பாசுரத்தின் வியாக்கியானத்திலே பெரியவாச்சான்பிள்ளை யிட்டருளின வியாக்கியானத்திற்குச் சேருமென்றபடி. அதிலேயே இரண்டாவது ப்ரகரணத்தில் * ஜந்மாந்தர ஸஹஸ்ரேத்யாதி (12) சூர்ணையின் வியாக்கியானத்திலே (விளக்கினைக்கண்டு என்கிற விடத்தில்)–"* விளக்கினை விதியில் காண்பார் * என்கிறவிது பகவத் ஸாக்ஷாத்காரமாகப் பூர்வர்கள் வ்யாக்யானம் பண்ணிவைத்தார்களாகிலும் இவர் ஆக்ம பரமாகவே அருளிச் செய்தாரென்று கொள்ளவேணும்" என்றருளிச் செய்துள்ளார். திருக்குறுந்தாண்டகத்திற்குப் பெரியவாச்சான்பிள்ளை தவிர வேறு யாரும் வியாக்கியானம் செய்தருளினரில்லையே. இங்கும் பூர்வர்கள் என்றே நிர்த்தேச முள்ளது ஸ்ரீவசநபூஷணத்தில் * பாஷ்யகாரர் காலத்திலே * (385) என்னும் சூர்ணையின் வியாக்கியானத்திலும் "இக்கதையை * தருதுயரம் தடாயேல் * என்கிற பாட்டின் வ்யாக்யானத்திலே ஸங்க்ரஹேண பூர்வர்கள் அருளிச்செய்து வைத்தார்களிறே" என்றருளிச் செய்துள்ளார். பெருமாள் திருமொழிக்கு வியாக்கியானம் பெரியவாச்சான்பிள்ளை யொருவர் அருளிச்செய்தனரேயன்றி வேறுயாரும் இட்டிருக்கக் கண்டிலோம் கேட்டிலோம். இங்ஙனே பலவிடங்கள் எடுத்துக்காட்டலாம். பத்திருபது இடங்களில் ஆச்சான்பிள்ளை, ஆச்சான்பிள்ளை யென்றே எடுத்துக் கூறியருளும் மாமுனிகள் மேலேகாட்டிய விடங்களில் அப்படி கூறியருளாமையை விமர்சந குசலர்கள் விமர்சிக்கவேணும். இதனல், மணவாளமாமுனிகள் பெரியவாச்சான்பிள்ளை யென்று எங்குமே அருளிச்செய்வதில்லை யென்று நாம் கூறுவதாகப் பிறர் கருதலாகாது.

83. மணவாள மாமுனிகள் தமது வியாக்கியானங்களில் பெரும்பாலும் சிலபல ஆசார்யர்களின் திவ்ய ஸ்ரீ ஸூக்திகளை ஸம்வாத ப்ரமாணமாக வெடுத்துக் காட்டியருள்பவ

http://acharya.org

ரன்றோ. அப்படிப்பட்ட விடங்களில் ஆசார்யர்களின் திருநாமங்களை வரிசையாக ஸாதித்து வரும்போது பெரியவாச்சான் பிள்ளையையும் ஸாதிக்கவேண்டிய ஆவச்யகதை நேர்ந்தால் அங்குப் பெரியவாச்சான் பிள்ளையென்றே ஸாதிப்பது நியதம். அங்கு வேறு விதமாக ஸாதிக்கமுடியாதன்றோ. வ்யக்தியைக் காட்டியாகவேணுமே. அப்படிப்பட்ட இடத்தையும் காண்மின். தத்வத்ரயத்தில் அசித் ப்ரகரணத்தில் "ஸ்பர்ச தந்மாத்ரை தொடக்கமான" (27) இத்யாதி சூர்ணைக்கு மணவாள மாமுனிகளின் வியாக்கியானம் மிகவிரிவானது. அங்குப் பிள்ளைலோகாசார்யர் மூலத்தில் சில விஷயங்கள் அவச்யம் அருளிச் செய்யவேண்டியிருந்தும் ஸம்க்ஷேபமாக அருளிச் செய்கிற க்ரந்தமாகையாலே அருளிச் செய்யாது விட்டிட்டாரென்று மாமுனிகள் முடிக்கிறார். அங்கு அவச்யமருளிச் செய்யவேண்டிய விஷயங்கள் எவை? என்பதை மாமுனிகள் தாமே விரிவாகக் காட்டியருளுகிறார். அவை பல பக்கங்கள் நிரம்பிய பெரிய விஷயமாகையால் இங்கு நாம் அவ்விஷய விவரணத்தில் செல்லாமல் ப்ரக்ருதத்திற்கு வேண்டியதை மட்டும் எடுத்துக்காட்டுகிறோம். வாதிகேஸரி அழகிய மணவாளச்சீயர் தத்வநிரூபண மென்றொரு க்ரந்தம் பணித்திருப்பதாகவும், ஆச்சான்பிள்ளை தத்வத்ரயவிவரண மென்றொரு க்ரந்தம் இட்டருளி யிருப்பதாகவும் அங்கு ஸ்பஷ்டமாகக் காட்டி அந்த க்ரந்தங்களிலிருந்து பல பல பங்க்திகளை உதாஹரித் தருளியுள்ளார். அங்கு மாத்திரமல்ல; தத்வத்ரய வியாக்கியானத்தில் பத்தெட்டு இடங்களில் ஆச்சான்பிள்ளையையும் அவருடைய ஸ்ரீ ஸூக்திகளையும் ப்ரஸ்தாவித்தருளுகிறார். உபக்ரமத்திலேயே "சித்தென்கிறது ஆத்மாவை" (3) என்றவிடத்து, "நடுவில் திருவீதிப்பிள்ளை பட்டரும் ஆச்சான்பிள்ளையும் முதலான ஆசார்யர்கள் தத்வத்ரயமருளிச் செய்கிற விடத்தில்" என்றருளிச் செய்துள்ளார். 35, 149 முதலான சூர்ணைகளின் வியாக்கியானத்திலுங் காணலாம். ப்ரஸ்துதமான ஸ்பர்சதந் மாத்ரை தொடக்கமான" (27) இத்யாதி சூர்ணையின் வியாக்கியானத்தில்:—"இது தத்வத்ரய விவரணத்தில் ஆச்சான்பிள்ளை யருளிச்செய்த க்ரமம்" "இது தத்வ நிரூபணத்தில் ஜீயரருளிச் செய்த க்ரமம்" என்று இரண்டு க்ரமங்களை யெடுத்துக்காட்டிவிட்டு, பிறகு அவ்விரண்டு க்ரமங்களையும் ஒருவாறு ஒருங்கவிட்டு, மேலே அருளிச்செய்துள்ள பங்க்திகளாவன "இப்படி பூததந் மாத்ரஸ்ருஷ்டி சொல்லுகிறவிடத்திலே ஆவரணக்ரமப் வக்தவ்யமாயிருக்கச் செய்தேயும் அருளிச் செய்யா தொழிந்தது அபேக்ஷிதமல்லாமையன்று; ஸங்கோசேந உத்பத்தி க்ரமத்தை அருளிச்செய்தாரித்தனை; பெரிய வாச்சான்பிள்ளையு மிப்படியேயிறே அருளிச்செய்தது." என்று. இதை நாம் விவரிக்கவேண்டுமோ? "ஆச்சான் பிள்ளையும் அழகிய மணவாளச் சீயரும் விரித்துரைத்தார்கள்; பிள்ளை லோகாசார்யரும் பெரியவாச்சான் பிள்ளையும் சுருக்கிச் சொன்னார்கள்" என்பதை ஸ்பஷ்டமாக வருளிச்செய்தாராயிற்று. இதனால் மணவாள மாமுனிகளால் ஆச்சான்பிள்ளை ஆச்சான்பிள்ளை என்று எடுக்கப்படுகிற ஆசிரியர் பெரிய வாச்சான் பிள்ளையல்லர் என்பது கல்வெட்டாகத் தேறிநின்றது. ஒரு ஸ்தலந்தன்னிலேயே 'ஆச்சான்பிள்ளை அப்படிச் சொன்னார்; பெரியவாச்சான்பிள்ளை இப்படிச் சொன்னார்' என்றெழுதியிருக்கையாலே இருவருமொருவரே யென்று கொள்வதற்கிடமில்லை யன்றோ. பெரியவாச்சான்பிள்ளை ரஹஸ்யத்ரயத்திற்கு அதிஸம்க்ஷிப்தமாக ஒரு படி அருளிச் செய்தாரென்னுமிடம் தேறி நின்றது.

84. ஆச்சான்பிள்ளை என்று நிர்விசேஷமாகக் குறிக்குமிடங்களில் பெரியவாச்சான் பிள்ளை விவக்ஷிதராகக் கூடாது என்று நிபந்தனையில்லை. பெரியவாச்சான்பிள்ளை வைபவம் சொல்லுவதாக மேலே மகுடமிட்டுக் கதைகளையோ அர்த்த விசேஷங்களையோ எழுதிக்

http://acharya.org

கொண்டு வருமடைவில் அடிக்கடி அவ்வாசிரியர் திருநாமத்தை ப்ரஸ்தாவிக்க நேருமன்றே: அங்கு ஸங்க்ரஹ ருசியாலே பெரிய என்னும் விசேஷணத்தைவிட்டு ஆச்சான்பிள்ளையென்றே எழுதிப்போருவதுஉண்டு; இது நிரவத்யமானது. உலகிலுள்ள நூலாசிரியர்களனைவர்க்கும் இந்த நடை உள்ளது. மணவாள மாமுனிகளைப்பற்றி யெழுதிக்கொண்டு போகையில் மாமுனிகள் என்று எழுதினேமாகில் எந்த மாமுனிகளென்று ஸந்தேஹிப்பாரில்லையே. லோகஸாரங்க மாமுனிகளை அங்கு நினைப்பாரில்லையே. தத்வத்ரய வியாக்கியானத்தில் (ஈச்வரப்ரகரணத்தில்) * இப்படி யீச்வரன் கல்யாண குணங்களோடே கூடியிருக்கையாலே * (11.) இத்யாதியான பெரிய சூர்ணையின் வியாக்கியானத்திலே— "க்ருதியாவையாவது.................தான் க்ருதக்ருத்யஞனை—என்றிறே பட்டருமருளிச்செய்தது" "க்ருதஜ்ஞனையாவது ......பாராதேயிருக்கை என்று இதுவும் பட்டாருளிச்செய்தார்" என்று மாமுனிகள் அருளிச்செய்துள்ளார். பட்டர் என்று ஸ்ரீ பராசரபட்டரைத்தானே ஒவ்வொரு க்ரந்தத்திலும் ஒவ்வொருவரும் எழுதிப்போருவது. மேலேகுறித்த இடத்திலே முந்தினசூர்ணையின் வியாக்யானத்திலே ஸ்ரீரங்கராஜஸ்தவச்லோகமொன்றை யுதாஹரித்து [க்ஷமா ஸாபராதே] என்றிறே பட்டாருளிச் செய்தது என்று ஸாதிக்கிறார். பகவத் விஷயாதிகளில் பட்டர் என வருமிடங்களில் இந்த பட்டர் யாரென்று விசாரம் தோன்ற ப்ரஸக்தியேயில்லை. மேலே யெடுத்துக் காட்டப்பட்ட தமிழ்ப்பங்க்திகளை பட்டருடைய எந்த க்ரந்தத்திலே நாம் காண்கிறோம். இல்லையே. ஆகவே இங்குப் பலர்க்கும் குழப்பமுண்டாகியேதீரும். அருளிச்செய்தவரோ விசதவாக்சிகாமணிகள். குழப்பமுண்டாகக் கூறுமவரல்லர். தெளியும் வழி காட்டுகின்றோங் காண்மின்; அந்தப்பெரிய சூர்ணையின்வியாக்யானத்தில் முந்துறமுன்னம் "........என்றிறே நடுவில் திருவீதிப்பிள்ளை பட்டர் தத்வத்ரயத்திலே அருளிச் செய்தது" என்று ஸாதித்திருக்கிறாராதலால் அடுத்த விடங்களில் பட்டரென்பது அந்த நடுவில் திருவீதிப்பிள்ளை பட்டரேயென்று மிக எளிதாக வுணரலாகும். ஓரிடத்தில்கூட நடுவில் திருவீதிப்பிள்ளை பட்டரென்று குறிப்பிடாமல் பட்டரென்றே ஸர்வத்ர குறிப்பிட்டிருந்தாராகில் பட்டரென்கிற ப்ரஸித்தி யார்க்கு உள்ளதோ அவர்க்கேதான் அச்சொல் வாசகமாய் முடியும். அது அஸமஞ்ஜஸமுமாகும். இனி ப்ரக்ருத விஷயத்தை உற்று நோக்குமின்; மாமுனிகள் தத்வத்ரய வியாக்கியானத்திலும் ஆச்சான்பிள்ளையின் ஸ்ரீஸூக்திகளை மிகமிகவெடுக்கிறார்; அப்படியே ரஹஸ்ய த்ரயவியாக்கியானத்திலுமெடுக்கிறார். இதனால் ஆச்சான்பிள்ளை யென்பவர் தத்வப்ரஸ்தானத்திலும் ரஹஸ்ய ப்ரஸ்தானத்திலும் விரிவான நூல்களைப் பணித்தருளினவர் என்று ஸ்பஷ்டமாகத் தெரிகிறது. விரிவின்றிக்கே ஸங்க்ரஹமான நூலைப் பெரியவாச்சான்பிள்ளை பணித்திருக்கிறாரென்பதையும் மாமுனிகளே ஸுஸ்பஷ்டமாகக் காட்டியருளினாரென்பது மிகவிசதம். ரஹஸ்ய ப்ரஸ்தானத்திலும் தத்வப்ரஸ்தானத்திலும் மிக விரிவான வாக்யராசிகளையே உதாஹரித்தருளும் மாமுனிகள் அங்கெல்லாம் நியமேந ஆச்சான்பிள்ளை யென்றே திருவெழுத்துச் சாத்துகிறார். விரிவான வாக்யங்களை யுதாஹரித்தருளுமிடங்கள் பலபலவுண்டே; ஓரிடத்திலும் பெரியவாச்சான் பிள்ளையென்று ஸாதித்திருக்கவில்லை. அஸம்பாவிதமானதை அவர் எப்படி ஸாதிப்பர். உண்மையில் பெரியவாச்சான்பிள்ளையின் ஸ்ரீஸூக்தியை ப்ரஸ்தாவிக்குமிடத்திலே பெரியவாச்சான் பிள்ளையென்று அளங்கோசேந ஸாதிக்கிறார். அவருடைய திருவாக்கல்லாத விடங்களில் ஆச்சான்பிள்ளை யென்றே ஸாதிப்பதென்று நியமங்கொண்டிருக்கிறாரென்பது ஸுஸ்பஷ்டமாகவும் அவிசால்யமாகவும் விளங்கா நிற்க, ஆச்சான் பிள்ளையென்று எடுக்குமிடங்களிலெல்லாம் பெரியவாச்சான் பிள்ளையே விவக்ஷிதர் என்று சொல்லுவது யுக்தமாகாது. அடியோடுசேராது.



http://acharya.org

85. மணவாளமாமுனிகளின் திவ்ய க்ரந்தங்களே நமக்கு நற்றெளிவு பிறப்பிக்கத் தக்கவை யென்பது புநருக்தம். அவருடைய திவ்ய ஸூக்திகளில் எங்கேயாவது ஓரிடத்திலாவது பரந்த ரஹஸ்யம் பெரியவாச்சான்பிள்ளை யருளிச் செய்ததென்று காணக்கூடியதுண்டாகில் மற்றவிடங்களில் ஆச்சான்பிள்ளை யென்றதற்கெல்லாம் பெரியவாச்சான்பிள்ளை யென்றே பொருள்— என்று திண்ணமாகக் கொள்ளலாம்; அப்படி ஓரிடமும் கிடையாது. "தத்வதீபத்திலே ஜீயர் அருளிச்செய்தார்" என்று பலவிடங்களில் காண்பதுண்டு. எந்த ஜீயர் என்று ஸந்தேஹமுண்டாகியே தீரும். சில விடங்களில் வாதிகேஸரி அழகிய மணவாள ஜீயரென்று விசேஷித்து அருளிச்செய்திருப்பதால்தான் ஸந்தேஹம் தொலைந்து தெளிவுபிறக்கின்றது. அங்ஙனே தெளிவு பிறப்பிக்க ஏதேனுமோரிடத்திலாவது பரந்தரஹஸ்ய ப்ரஸ்தாவத்திலே பெரியவாச்சான்பிள்ளையென்கிற விசேஷ நிர்தேசம் காணப்பட வேண்டுமே. அஃது அடியோடு இல்லையே. இதுதானே ஆராய்ச்சியில் உயிராகநிற்பது. "பரந்த ரஹஸ்யத்திலே பெரியவாச்சான்பிள்ளை யருளிச்செய்தார்" என்று யாரேனுமோராசிரியர் ஏதேனுமொரு மூலையிலெழுதியிருந்தாலும் போதுமே. அருளிச்செயல் வியாக்கியான ப்ரஸ்தாவங்களிலே பெரியவாச்சான்பிள்ளை யென்று எழுதுவதும் ரஹஸ்யத்ரய தத்வத்ரய ப்ரஸ்தாவங்களிலே ஆச்சான்பிள்ளையென்று எழுதுவதுமேகாண்பது.

86. முமுக்ஷுப்படியில் "அவையாவன ஜ்ஞாநாநந்தாமலத்வாதிகளும்" (97) என்கிற சூர்ணையின் வியாக்கியானத்திலே, "இதுதான் நடுவில்திருவீதிப்பிள்ளை பட்டர் ஆச்சான்பிள்ளை இவர்களருளிச்செய்த ப்ரபந்தங்களிலே ஸுஸ்பஷ்டம்" என்கிற ஸூக்தி விந்யாஸமும், அது தன்னிலேயே மேலே த்வய ப்ரகரண வியாக்கியான அவதாரிகையில் "ஆச்சான்பிள்ளை ஜீயர் முதலானோரும் இந்த பிரகாரமிறே அருளிச் செய்தது" என்கிற ஸூக்திவிந்யாஸமுமுள்ளது. முந்தின வாக்யத்தில் ஆச்சான்பிள்ளைக்கு த்விதியஸ்தாந நிவேசமும், பிந்தின வாக்யத்தில் அவர்க்கு ப்ரதமஸ்தாந நிவேசமும் உள்ளது. இந்த வாசி எதனாலேயென்று ஆராயவேணும். ஒரு நியதியின்றிக்கே வாக்யரசனை பண்ணிப் போருகிற மற்றையோர்களைப் போலல்லாமல் அந்யூநாதிரிக்தமாகவும் மிக்க வொழுங்குபாடு பொலியவும் வாக்யரசனை செய்தருளுந்திறன் கடல் சூழ்ந்த மண்ணுலகில் மணவாளமாமுனிகளுக்கே அஸாதாரணமென்பது மறக்கத் தக்கதன்று. முந்தின வாக்யத்தில் நடுவில் திருவீதிப்பிள்ளை பட்டரை முன்னேயிட்டு ஆச்சான்பிள்ளையைப் பின்னேயிட்டது எனென்னில்; அவ்விருவருடையவும் பௌர்வாபர்ய க்ரமத்திற்கிணங்கவேயாம். ஆச்சான்பிள்ளையென்கிற சொல்லால் பெரியவர்ச்சான்பிள்ளை விவக்ஷிதராயிருந்தால் அங்ஙனே பங்க்தி அமைந்திராது. நம்பிள்ளை திருவடிகளில் பெரியவாச்சான்பிள்ளையும் வடக்குத் திருவீதிப்பிள்ளையும் ஆச்ரயித்தபின் வெகு காலத்திற்கு அப்பால்தான் நடுவில் திருவீதிப்பிள்ளை பட்டர் வந்து ஆச்ரயித்தாரென்பது மூவுலகுமறியும். நெடுநாள் அஸூயையைகொண்டு அகன்றிருந்த அவரை முன்னேயெழுதிப் பெரியவாச்சான்பிள்ளையைப் பின்னேயெழுத ஔசித்யலேசமும் கிடையாது. இங்கு ஆச்சான்பிள்ளையென்னப்பட்டவர் உண்மையில் பெரியவாச்சான் பிள்ளையல்லராதலாலும் நடுவில் திருவீதிப்பிள்ளை பட்டர்க்குப் பிற்பட்ட ஆசிரியரேயாதலாலும் இந்த பௌர்வாபர்ய க்ரமம் தப்பாதபடிக்கு மாமுனிகள் ஸூக்தி விந்யாஸம் செய்தருளியிருப்பது மிகப்பொருத்தம்.

87. இனி, பிந்தினவாக்யத்தில் ஆச்சான்பிள்ளையை முன்னேயிட்டு ஜீயரைப்பின்னேயிட்டதும் மிகப்பொருத்தம். ஜீயர் என்றது பன்னீராயிரவுரைகாரரான வாதிகேஸரி

http://acharya.org

ர்பரையன்றோ; அவர் ஆச்சான்பிள்ளை திருவடிகளையாச்ரயித்து உய்ந்தவரேயாதலால் இங் கும் பௌர்வாபர்ய க்ரமம் தப்பிற்றில்லை. இங்கு முக்யமான நோக்கு முந்தின் வாக்யஸங் ந்தேசத்திலேயாம். மாமுனிகள் தம்முடைய வியாக்யானங்களில் அடிக்கடி உதாஹரித்தருளு கிற ஸ்ரீஸூக்திகளுக்கு எவர் வக்தாவோ அவரையேயன்றோ ஆச்சான்பிள்ளையென்று நிர்த் தேசிப்பது. அவர் பெரியவாச்சான்பிள்ளையாக இருந்தால் நடுவில் திருவீதிப்பிள்ளைபட்டரை முன்னேயிட்டு இவரைப் பின்னேதள்ளி வாக்யரசனை யமைத்தது அஸமஞ்ஜஸமேயாகும். இந்த அபக்யாதி மாமுனிகளை அணுமாத்ரமும் ஸ்பர்சிக்கக் கூடியதன்றே. இருவரையோ மூவரையோ நால்வரையோ ஐவரையோ எடுத்துப்பேசுவதானால் மாமுனிகள் ச்லோகத்திலானா லும் பாசுரத்திலானாலும் அடைவுதப்பாமலே யருளிச்செய்பவரென்பதை * ஶுத்தாத்மயாமுந குருத்தம கூரநாத பட்டாக்யதேசிகவர *என்ற யதிராஜவிம்சதி ச்லோகத்திலும், *பிள்ளான் நஞ் சீயர் *நஞ்சீயர்செய்த *என்றிவை முதலான (உபதேசர.) பாசுரங்களிலும்வெகு அழகாகக் காணலாம். ஆக, நடுவில் திருவீதிப்பிள்ளை பட்டர்க்குப் பிற்பட்டவரும் வாதிகேஸரி ஜீயர்க்கு முற்பட்டவருமான ஒரு ஆசிரியரையே ஆச்சான்பிள்ளையென்று மாமுனிகள் குறிப்பிடுகிறா ரென்பது அவிசால்யமாகத் தேறிற்று. நடுவில் திருவீதிப்பிள்ளை பட்டர் பெரியவாச்சான் பிள்ளையைக் காட்டிலும் எந்த விதத்திலும் முற்படத் தகுதியில்லை.

88. மாமுனிகள் முமுக்ஷுப்படி வியாக்கியானத்தில் பரந்த ரஹஸ்ய ஸூக்திகளை அடிக்கடி யுதாஹரித்து ஆச்சான்பிள்ளையருளிச் செய்தாரென்று எழுதியருளியதுபோலவே, தத்வத்ரய வியாக்கியானத்திலும் தத்வத்ரயவிவரண மென்றொரு க்ரந்தத்தை அடிக்கடி ப்ரஸ்தா வித்து அதையருளிச் செய்தவர் ஆச்சான்பிள்ளையென்று பலகால் காட்டியருளியிருக்கின்றா ராதலால் இந்த தத்வத்ரய விவரண க்ரந்தமும் பெரியவாச்சான்பிள்ளை ஸாதித்ததுதானா? என்று கேட்டால் "ஆமாம, அதுவும் பெரியவாச்சான்பிள்ளையே ஸாதித்தது; அவரைத்தான் ஆச்சான்பிள்ளையென்று எழுதியிருக்கிறார் மாமுனிகள்" என்று சொல்லித் தீரவேண்டும் பிறர். இப்படி வாய்வந்தபடி சொல்ல வழியில்லாதபடியன்றோ மாமுனிகள் அங்குச் செய் தருளியிருப்பது. அது கீழ் 83 ஆம் வார்த்தையில் மூதலிக்கப்பட்டதே. [அந்த ஆச்சான் பிள்ளைக்குப் ப்ரதிகோடியாகப் பெரியவாச்சான் பிள்ளையை யெடுத்துக் காட்டியுள்ளது.

89. பெரியவாச்சான் பிள்ளையை ஒரு காலத்தில் பெரிய என்கிற விசேஷணமில்லா மல் ஆச்சான்பிள்ளை யென்றே வழங்கிவந்தார்களென்று யாரும் இசைந்து தீரவேண்டிய துண்டு. முதலிலேயே பெரியவாச்சான் பிள்ளையென்று வ்யபதேசிக்கமாட்டார்களே. ஒருவற்கு ஒரே புத்திரன் ஜநித்திருக்கும்போது அவனை ஜ்யேஷ்டபுத்ரனென்றோ மூத்த புதல்வனென்றோ வழங்குவதுண்டாவென்று பாருங்கள். கநிஷ்டபுத்ரன் பிறந்தபிறகுதானே ஜ்யேஷ்ட புத்ரனென்று வழங்க நேருவது. கநிஷ்ட ப்ரஸக்தியில்லாத வ்யாவ்ருத்திக்காக ஜ்யேஷ்ட புத்ரனென்று வழங்க நேருவது. கநிஷ்ட ப்ரஸக்தியில்லாத வளவில் நிர்விசேஷணமாகப் புத்ரனென்றே சொல்லிவருமாபோலே வேறு ஆச்சான் பிள்ளை கள் ஏற்படுவதற்கு முன்னே ஆச்சான்பிள்ளையென்றே வழங்கப்பட்டு வந்தவர்தாம் பிறகு வ்யாவ்ருத்தி ஸித்திக்காகப் பெரியவாச்சான்பிள்ளை யென்று வழங்கப்பட்டார். ஆகவே, பெரியவாச்சான்பிள்ளையை ஆச்சான் பிள்ளையென்றே முன்னோர்கள் வ்யவஹரித் தன்னார்களென்று சிலர் காட்டினால், அது ப்ரக்ருத விஷயத்திற்கு ஈஷத்தும் உபகாரமாகாது. ... .... .... (5)

http://acharya.org

90. திருவரங்கம் பெரிய கோயிலில் ஸ்ரீரங்கநாராயண ஜீயர் ஆஸ்தானத்தை அலங்கரித்திருந்த (கீர்த்தி மூர்த்தியான) ஸ்ரீமத் பரமஹம்ஸ. அயோத்யா ராமாநுஜ ஜீயர்ஸ்வாமி இப்படிப்பட்ட ஆராய்ச்சிகளில் மிக வல்லவரென்பது ஜகத்ப்ரஸித்தம். அந்த ஸ்வாமி பல மஹாசார்யர்களிடம் உபயவேதாந்த ரஹஸ்யங்கள் அதிகரித்து விச்வ விக்யாத கீர்த்தியாய் விளங்கினவர். அந்த ஸ்வாமி மந்த்ரார்த்த தீபிகா என்றொரு மஹாக்ரந்தத்தை தேவநாகர லிபியில் அச்சிட்டு வெளியிட்டிருக்கிறார். இது, முமுக்ஷுப்படிக்கும் அதற்குமணவாளமாமுனிகளருளிச் செய்த வியாக்கியானத்திற்கும் விபுலமான ஸம்ஸ்க்ருத வியாக்கியானம். மணவாள மாமுனிகளருளிய த்வய ப்ரகரண வியாக்கியான அவதாரிகையில் "ஆச்சான்பிள்ளை ஜீயர் முதலானோரும்" என்றிருக்கிறதன்றே; அவ்விடத்திற்கான ஸம்ஸ்க்ருத வ்யாக்யானத்தில் [6-வது பக்கம் 18-வது வரி] "அபயப்ரதராஜபுத்ர:–பரந்த ரஹஸ்யே" என்று ஸுஸ்பஷ்டமாக எழுதப்பட்டிருப்பதைக் காணலாம். "அபயப்ரதராஜ புத்ரரென்றது பெரியவாச்சான் பிள்ளையைத்தான்" என்று ஸஹஸா சொல்லத் துணிவாருண்டோ? * ச்ருத்யர்த்த ஸாரஜநகம் * என்கிற தனியனில் * அபயப்ரதராஜ புத்ரம் * என்று கூறப்பட்டவரே மணவாள மாமுனிகளால் ஆச்சான்பிள்ளை யென்று அருளிச்செய்யப்பட்டவரென்பது நிஸ்ஸந்தேஹமாயிற்று.

91. இங்கே ஒருமருமம். இப்போதும் உலகில்பலர் அப்பங்கார் என்றும் அப்பனையங்கார் என்றும் அப்பலாசாரியரென்றும் அழைக்கப்பட்டாலும் இவர்களுக்கு ஸ்ரீநிவாஸசர்மந் என்பதுதத்துவம். இப்படி முற்காலத்தில் ஆச்சான்பிள்ளையென்று வழங்கப்பட்டு வந்தவர்களுக்கெல்லாம் ஸ்ரீ க்ருஷ்ணசர்மந்தான். ஆகவே ஆச்சான்பிள்ளையென்று திருநாமங்கொண்டவர்களாக மூதலிக்கப்பட்ட ஆசிரியர்கள் மூவரும் ஸ்ரீ க்ருஷ்ணசர்மாக்களாகவே விளங்கினார்கள். அவர்களுக்கெல்லாம் ஸம்ஸ்க்ருத வ்யபதேசம் க்ருஷ்ணபாதா: என்றோ, க்ருஷ்ணமஹாசார்யா: என்றோ, க்ருஷ்ணஸூரய; என்றோ ஏகவிதமாகவே யிருந்தது. வடக்குத் திருவீதிப்பிள்ளைக்கும் அதுவேதான் சர்மந். வாசி தெரிவதற்காகவே சில சில சொற்களையிட்டு வ்யாவ்ருத்தி பண்ணியிருக்கிறது. ஸம்ஸ்க்ருத பாஷையில் பெரியவாச்சான் பிள்ளையையும் ஆச்சான் பிள்ளையையும் ஸ்ரீக்ருஷண ஸமாஹ்வயா: என்று ஏகரூபமாகவே யெழுதுவதுண்டு. இதனால் வ்யக்திமாறாட்டம் உண்டாய் விடப் போகிறதே யென்று நினைத்தே மேலேகுறித்த மந்த்ரார்த்ததீபிகையில் அபயப்ரத ராஜ புத்ர: என்று ஸுஸ்பஷ்ட விவரணம் காட்டப்பட்டுளளது.

92. மந்த்ரார்த்ததீபிகை யென்கிற க்ரந்தம் ச்ரமப்பட்டு ஸம்பாதிக்கவேண்டுமாதலால், பெரும்பாலும் ஒவ்வொருவருடைய திருமாளிகையிலும் விளங்காநின்ற ஸ்ரீ கோசத்திலேயே இவ்விஷயத்தை மிகவிளங்கக் காணலாம். மேலேகுறித்த ஸ்ரீமத் அயோத்யாராமாநுஜ ஸ்வாமி 1911 ஆம் வருஷத்தில் பரிசோதித்து வெளியிட்ட அஷ்டாக்ஷரஹஸய க்ரந்தம் எங்கும் கிடைக்கின்றதன்றோ? அதில் எண்பத்தெட்டாவது பக்கத்தில் அனைவருங்காண அந்த ஸ்வாமி யெழுதியருளிய குறிப்பு இது காணீர்.— "பரந்த ரஹஸ்யமும் நைனாரச்சான்பிள்ளையே அருளிச்செய்தது திருமந்த்ரார்த்த வியாக்க்யாநாதிகளில் விசதம். ஆச்சான்பிள்ளை யென்பது இவரையே. பெரியவாச்சான்பிள்ளை யருளிச் செய்ததாகில் தத்வத்ரயாதிகளிற்போல் இவ்விடத்திலும் பெரியவாச்சான்பிள்ளை யென்றே அருளிச் செய்யலாம். நைனாராச்சான்பிள்ளை யென்றே ஸம்ப்ரதாயம்" என்று எழுதப்பட்டுள்ளது.

http://acharya.org

93. இக்காலத்தவர்கள் எழுதிவைத்திருப்பவைகளை நாம் ப்ரமாணமாக இசைந்து தீரவேண்டிய அவசியமில்லை; மணவாளமாமுனிகளுக்குப் பிற்பட்டவர்கள் எழுதிவைத்ததை யெல்லாம் ஸாகல்யேந ப்ரமாணமாக நாம் இசையும்வர்களல்லோம். யுக்தமென்று தோன்றினால் கொள்ளுவோம்; இல்லையேல் தள்ளுவோம். அவர்களுக்கு ப்ரமப்ரமாதங்கள் கிடையாவென்று நாம் எண்ணியிருக்கவில்லை. ஆகவே அயோத்யா ஜீயருடைய வாக்யம் அப்ரமாணமாகவுங்கூடும். ஆயினும் இங்கு நாம் அதையெடுத்துக் காட்டினது ஏனென்னில்; ப்ரக்ருத விஷயத்தில் அடியேனுக்கு இப்போதாக வுண்டான யதார்த்த ஜ்ஞானம் பெரியோர்களான சிலர்க்கு நெடுநாள் முன்னமே யுண்டாகியிருந்தது; இன்று அடியேன் தான்தோன்றியாக இந்த விஷயத்தை விளம்புமவனல்லேன்; ஏற்கெனவே ஆசார்யபீடத்தை வஹித்து விளங்கியிருந்த பெரியார்களுடைய ஸூக்தி ஸம்வாதமுமுண்டு என்று காட்டுவதற்காகவும், அந்த மஹாக்ரந்தங்களை ப்ரகாசநம் பண்ணியருளின அயோத்யாராமாநுஜ ஜீயர்ஸ்வாமி திருவடி ஸம்பந்தமுள்ள மஹான்களுக்காவது இந்த விவாதத்தில் நிஷ்கல்மஷமான நிர்ணயமுண்டாகட்டுமென்று நினைத்துமே.

94. மணவாள மாமுனிகளின் ஸ்ரீஸூக்திகளினாலேயே இவ்விஷயத்தில் நமக்கு நிஷ்கர்ஷம் செவ்வனே யுண்டாகின்றதென்று கீழே பரக்க நிரூபித்திருக்கின்றோமாகையால் அந்த ஸ்ரீஸூக்திகளுக்கு மேற்பட வேறொரு ப்ரமாணம் தேடவும் காட்டவும் ஆவச்யகதை ஒத்தமில்லை. இவ்விடத்தில் ப்ராஸங்கிகமாகச் சில வார்த்தைகள். நூறு வருஷங்களுக்கு முன்பு எழுந்தருளியிருந்த (கீர்த்திமூர்த்தி) கோவர்த்தனம் ரங்காசார்யஸ்வாமி வடதேசத்து ஸ்ரீ வைஷ்ணவர்களுக்கு மஹோபகாரகமாக நம் ஸம்ப்ரதாய க்ரந்தங்கள் பலவற்றை ஸம்ஸ்க்ருத பாஷையில் தாமே அநுவாதம் செய்தும் தம் அடியார்களையிட்டு அநுவாதம் செய்வித்தும் ப்ரசுரம் செய்தருளியுள்ளார். இது ஜகத்ப்ரஸித்தமான விஷயம். அந்த ஸ்வாமிதாமே அநுவாதம் செய்தருளினவை மிகச்சில க்ரந்தங்களே; அவற்றில் தத்வவிபர்யாஸம்புகுவதற்கு ப்ரஸக்தியில்லை. பிறரைக்கொண்டு அநுவாதம் செய்வித்த நூல்களில் பலவகையான விபர்யாஸங்கள் காண்பதுண்டு. அவற்றில் ப்ரக்ருத விஷயத்திற்கு ஸம்பந்தித்த வொன்று சேண்டின். தத்வத்ரய ரஹஸ்யத்தை மணவாள மாமுனிகளின் வியாக்யானத்தோடுகூட ஒரு அக்ஷரம் விடாமல் பரிபூர்ணமாக ஸம்ஸ்க்ருதாநுவாதம் செய்து தேவநாகராக்ஷரத்தில் இரண்டு தடவை பதிப்பித்திருக்கிறது. இந்த க்ரந்தம் வடஇந்தியாவில் வேதாந்த விசாரத பரீக்ஷைக்குப் பாடமாகவும் வெகுநாளாக வைக்கப்பட்டிருக்கின்றது. இதிலுள்ள விபர்யயங்கள் பல பல. ப்ரக்ருதோபயுக்தமானதுதானே இங்குக் காட்டவேண்டும். அதில் அசித்ப்ரகரணத்தில் மாமுனிகள் வாதிகேஸரி ஜீயருடைய தத்வநிரூபண க்ரந்தத்திலிருந்து பங்க்திகளை அடிக்கடி உதாஹரித்து ஜீயருமருளிச்செய்தார்” என்றருளிச் செய்துள்ளார். அங்கெல்லாம் ஜீயரென்பது * அன்போடழகிய மணவாளச்சீயர் * என்று உபதேசரத்தின மாலையில் ப்ரஸ்தாவிக்கப்பட்ட அழகிய மணவாளச் சீயரேயென்று நிஸ்ஸந்தேஹமும் நிர்விவாதமுமானது. அப்படியிருக்க அந்த அநுவாதகாரர் நஞ்சீயரையே ஜீயரென்றதாக மயங்கி “வேதாந்தியதிபி: தத்வநிரூபணே ப்ரோக்தம்” என்று பலகாலும் எழுதிவிட்டார். தத்வநிரூபண க்ரந்தம் அத்யாபி உலகில் ப்ரசாரத்திலுள்ளது. அச்சிடப்பட்டுமுள்ளது. இது நஞ்சீயருடையதென்று யாரும் சொல்லகில்லார். அகாண்டே அஸ்தாநே ப்ரமித்துவிட்டார். வடதேசத்தார் யாவரும் தத்வநிரூபணம் நஞ்சீயா ஸாதித்ததென்றே திண்ணமாகக் கொண்டு



http://acharya.org

விட்டார்கள். உண்மையை யெடுத்து எவ்வளவு உரைத்தாலும் கொள்ளார்கள். இவ்விதமாக ஏற்பட்டிருக்கின்ற விபர்யாஸங்கள் அர்வாசீநர்களுடைய க்ரந்தங்களில் அபரிமிதம்.

96. சென்னை ஸ்ரீவைஷ்ணவ க்ரந்த முத்ராபக ஸபையாரால் (60 வருஷங்களுக்கு முன்பு) ஸம்ப்ரதாய அகராதி யென்றொரு புக்தகம் (500 பக்கங்கள் கொண்டது) அச்சிட்டு வெளியிடப் பட்டிருக்கிறது. அதை ஸங்கலனம் செய்தவர் யாரோ அறியோம். அதிலுள்ள விபர்யயங்கள் எல்லைகடந்தவை. ப்ரக்ருதோபயுக்தமான சிலவற்றையே இங்கெடுத்துக் காட்டுகிறேன். அதில் (பக்கம் 156-ல்) அழகிய மணவாளச் சீயர் என்றெடுத்து "இவர் நம்பிள்ளை சிஷ்யர்" என்றெழுதி கதையுமொன்று எழுதப்பட்டிருக்கிறது. திருவாய்மொழிக்குப் பன்னீராயிரவுரை, தத்வதீபம் முதலான க்ரந்தங்களையும் இவரே பணித்ததாகவும் எழுதி முடிக்கப்பட்டிருக்கிறது. இது ஸர்வாத்மநா பொருந்தாத விஷயம். இவர் நம்பிள்ளையின் ப்ரசிஷ்யருடைய சிஷ்யர் என்பது [அதாவது, நாயனாராச்சான் பிள்ளையின் சிஷ்யர் என்று] நிர்விவாதம். உபதேச ரத்தினமாலை வியாக்கியானம் முதலியவற்றில் ஸுஸ்பஷ்டமாக எழுதப்பட்டுள்ளவிஷயமிது. ஆனதுபற்றியே இவருடைய க்ரந்தங்களில் [தத்வதீப தீபப்ரகாசங்களில்] வேதாந்த தேசிக ஸூக்திகள் அநேகமாக உதாஹரிக்கப்பட்டுள்ளன. இப்படிப்பட்ட இவரை நம்பிள்ளை சிஷ்யரென்று எழுதுவதும் அதற்கேற்கக் கதைகள் தொடுப்பதும் கண்டால், என்ன சொல்லுவது?

97. அதிலேயே அடுத்தபடி அழகியமணவாளப் பெருமாள் நாயனார் என்றெடுத்து, இவர் பிள்ளைலோகாசார்யருடைய திருத்தம்பியார் என்று எழுதியுள்ளது சரி; உடனே "இவர் செய்தருளின க்ரந்தங்கள் ஆசார்யஹ்ருதயம் பெரியாழ்வார் திருமொழி வியாக்கியானம் முதலானவை" என்றெழுதியுள்ளது. ஆசார்ய ஹ்ருதயகாரரான விவர் திருப்பாவை ஆறாயிரப்படி யருளிச் செய்தவரென்று நாடு நகரமும் நன்கறிந்த விஷயம்; அதை விட்டிட்டு பெரியாழ்வார் திருமொழி வியாக்கியானமிட்டருளினரென்று அடியோடில்லாததொன்றை யெழுதிவைத்துளது. இன்னமும், எங்களாழ்வான்........முதலான திருநாமங்களை யெடுத்து எழுதியிருப்பவைகளும் ப்ரமாண வைதேசிகங்கள். ஸம்ப்ரதாயதத்வமறியாதவர்கள் இதையெல்லாங்கண்டால் தவறுகவேயன்றோ ப்ரவசநபரம்பரை உலகில் ஊர்ஜிதமாகிவிடும்.

98. உலகமெல்லாம்பரவிய பிரபலமான தடுமாற்ற மொன்றுகேண்மின். 1909ஆம் வருடத்தில் முதலில் அச்சிடப்பட்டு மறுபதிப்புமேறியுள்ள இராமநாதன்டிக்ஷனரி யென்னுமோர் பெருஞ்சுமையான தமிழகராதியில் ஸ்ரீவைஷ்ணவாசாரியர்களின் பெயர்களையெடுத்து எழுதியுள்ள விபரீதங்கள் மிக வருந்தத் தக்கவை. சிலகாட்டுவோம்.) (பக்கம் 973ல்) பிள்ளைலோகாசாரியர் என்றெடுத்து, "திருவரங்கத் தந்தாதி, திருவரங்கக் கலம்பகம், அர்த்த பஞ்சகம் முதலிய நூல்களை யியற்றிய வைஷ்ணவதமிழ்ப்புலவர்" என்றெழுதியுள்ளது. இதற்கு நாம் என்ன சொல்லுவது? இது உலகமறிந்த மருளன்றோ. அதிலேயே (பக்கம் 604ல்) "சிவாக்கிரயோகி" என்றெடுத்து "இவர் தஞ்சாவூரிலே சரபோஜி மகாராஜாவினுடைய சபையில் மணவாள மாமுனி யென்னும் வைஷ்ணவச்ரேஷ்டரோடு பதினேழுநாள் வரையில் அவர்கடாவிய வினாக்களுக்கெல்லாம் ஏற்றவாறு விடையளித்துச் சிவபரத்துவம் கா(நா)ட்டி வரும்போது பதினேழாநாளிரவு சிவாக்கிரயோகி யெழுந்தருளியிருந்த மடத்தில் தீக்கொளுவினர்கள்......." என்றெழுதப்பட்டுள்ளது. மேலே மணவாளமாமுனிகள் என்றெடுத்து "இவரும் சிவாக்ரயோகிகளும் ஒரு காலத்தவர்கள்; இருவரும் தஞ்சாவூரிலே சரபோஜி மகாராசன் சமுகத்தில் பதினேழுநாள் செய்த சமயவாதப் போரிலே தோற்றவராயினும் இவர்

http://acharya.org

தமிழ்ப் புலமையில் மிகச் சிறந்தவரென்பது இவர் அருளிச்செய்த உபதேச ரத்தினமாலை முதலிய பிரபந்தங்களால் கரதலாமலகமாக விளங்கும்" என்றெழுதப்பட்டுளது. மேலே "வேதாந்தம்" என்றெடுத்து "அத்வைதம்" என்று பொருளெழுதியுள்ளவிவர் எதுவும் எழுதலாம். பிள்ளைப் பெருமாளையங்கார் இயற்றிய அஷ்டப் பிரபந்தங்களைப் பிள்ளை லோகாசாரியர் பணித்ததாகக் கூசாமல் எழுதியுள்ள விவர் எதுதான் எழுதமாட்டார். இப்படிப்பட்ட புத்தகங்கள் உலகம் பரவிவிட்டால் மெய்ம்மைப் பொருள்கள் தங்க இடமுண்டோ?

99. அவ்வகராதி கோத்தவர் ஸ்ரீவைஷ்ணவ ஸம்பிரதாயத்தினுட் புகாமையினால் ஏதோ அநவதானத்தினாலெழுதிவிட்டார் என்றாவது சொல்லிவிடலாம். இந்த ஸம்ப்ரதாயத்திலேயே தோன்றி இரவும் பகலும் இதிலேயே பழகிவருபவர்களும் வ்யக்திமாறாட்டமாக எழுதிவைத்துப் பிரசுரமும் செய்துவிட்டால் இதனில் மிக்கோரயர்வுண்டோ? திருவஹிந்திரபுரத்தில் வாழ்ந்த சதாவதானம் ஸ்ரீநிவாஸாசார்யஸ்வாமி யென்பவர் பரஸித்தபண்டிதர். தேசிகனருளிச்செய்த ந்யாயபரிசுத்தியை முதன்முதலாக அச்சிட்டபோது அதற்கு மிக விரிவான பூமிகையொன்று இந்த ஸ்வாமி எழுதிச் சேர்த்து வெளியிட்டுள்ளார். அதில் இப்படிப்பட்ட வ்யக்தி விபர்யயங்கள் சில சில கேண்மின்; "[illegible] ஸ்ரீ[illegible] ஸ்ரீவத்ஸாங்க[illegible] [illegible] விவரணம் [illegible]" என்று (அதில் 4-வது பக்கத்தில்) உள்ளது. இதனால் ஷடர்த்த ஸம்க்ஷேபமென்கிற க்ரந்தம் மணக்கால் நம்பியருளிச்செய்ததென்று இவர் தெரிவிக்கிறார். இது மிகத்தவறு, மஹத்தான ப்ரமம். ஷடர்த்தஸம்க்ஷேபக்ரந்தத்திலுள்ள சில பங்க்திகளை வேதாந்தவாசிரியர் அநேகக்ரந்தங்களில் எடுத்துக்காட்டியுள்ளார். ந்யாயஸித்தாஞ்ஜநம், தத்வடீகை, ஸ்தோத்ரபாஷ்யம், ரஹஸ்யத்ரயஸாரம் ஆகிய இவற்றில் உதாஹரித்துள்ளார். ஸோமாசியாண்டானருளிச்செய்தது ஷடர்த்த ஸம்க்ஷேபமென்று ரஹஸ்யத்ரயஸாரத்தில் ஸுவ்யக்தமாகவெழுதியுள்ளார். அந்த ஸோமாசியாண்டான் உடையவருடைய சிஷ்யகோடியிற் சேர்ந்தவர். மணக்கால்நம்பிக்கு வடமொழியில் என்ன திருநாமமோ அதுவேதான் அந்த ஸோமாசியாண்டானுக்கும். அதாவது ஸ்ரீராமமிச்ரகுருவென்பது. அதைக்கொண்டு மிகவும் ப்ரமித்து "ஆளவந்தாருடைய ஆசார்யரும் உய்யக்கொண்டாருடைய சிஷ்யருமான ஸ்ரீராமமிச்ரகுருவென்று எழுதிவிட்டார். அதே பூமிகையில் "வாதிகேஸரிநாமா லோகாசார்யாவரஜ:' என்று மெழுதியுள்ளார். வாதிகேஸரி அழகிய மணவாளச்சீயரென்பவர் பிள்ளைலோகாசார்யருடைய திருத்தம்பியென்கிறார். இதுவும் மஹாப்ரமம். வாதிகேஸரியென்பவர் பன்னீராயிரப்படி, தத்வதீபம், தீபப்ரகாசம், திருவிருத்தம் ஸ்வாபதேசவுரை முதலியவையருளிச்செய்த உத்தமாச்ரமி. பிள்ளைலோகாசார்யருடைய திருத்தம்பியாரோ அழகியமணவாளப்பெருமாள் நாயனாரென்பவர். இவர்தாம் ஆசார்யஹ்ருதயாதிகள் அருளிச்செய்தவர். இவர் உத்தமாச்ரமியல்லர், நைஷ்டிக ப்ரஹ்மசாரி. வாதிகேஸரியென்கிற விருதும் இவர்க்குக் கிடையாது. எல்லாம் வ்யக்தி ப்ரமமாகவே எழுதப்பட்டு உலகம் பரவியுள்ளது. எவ்வளவு பரவினாலும் எத்தனையுகமானாலும் உண்மை உண்மையாகவே விளங்கித் தீருமன்றே. நம் கண்ணில் தென்படுகிற இப்படிப்பட்ட விபர்யாஸங்களையெல்லாம் நாம் லோகோபகாரார்த்தமாகவே ஸமயவிசேஷங்களில் சிக்ஷித்துவருகிறோம்.

http://acharya.org

100. ப்ரமாதங்கள் மநுஷ்யர்களுக்கு ஸஹஜமாதலால் அதை உள்ளபடி ப்ராமாணிகர்கள் கண்டறிந்து வெளியிட்டால் ஏற்றுக்கொள்வது சிலபெரியார்களின் பரமகுணம். பதினைந்து வருடங்களுக்கு முன்பு திருச்சிராப்பள்ளி ஸமீபத்தில் பரந்த ரஹஸ்யத்தைத் தமிழில் அச்சிட்ட ஒரு பெரியவர் பெரியவாச்சான்பிள்ளை ஸ்ரீஸூக்திகளையெல்லாம் அடைவே வெளியிடப்போவதாகப் பிரகடனம் செய்திருந்து ஒரு பத்ரிகையின் அட்டையில் "பெரியவாச்சான்பிள்ளை ஸூக்திமாலா—மலர் 2." என்று மகுடமிட்டு "பெரியவாச்சான்பிள்ளை யருளிச்செய்த சதுச்ச்லோகீ வியாக்கியானம் அழகியமுறையில் அச்சிடப்படடு வருகிறது, விரைவில் வேளிவரும்" என்று விளம்பரம் வெளியிட்டுவைத்து, பிறகு வேறொரு மாத பத்ரிகையின் அட்டையில் "சதுச்ச்லோகீ வியாக்கியானம் பேரியவாச்சான்பிள்ளை யருளிச்செய்ததாகத் தவறுதலாய் அச்சிட்டுவிட்டேன்; அது நாயனாராச்சான்பிள்ளை யருளிச்செய்ததேயொழியப் பெரியவாச்சான்பிள்ளை யருளிச்செய்ததன்று" என்று எழுதி முடிக்கவேண்டியதாக நேர்ந்துவிட்டது. இந்த ப்ராமாணிகத்வத்தைப் பரந்த ரஹஸ்யவிஷயத்தில் ஏற்றுக்கொள்ள முடியாமற்போனது "[illegible]" என்று உலகம் பரிஹஸிக்க நேருமேயென்கிற கூச்சத்தினுலென்று முடிவடைந்திட்டது. பெரியார்கட்கு இது தகுதியாமோ? ... (*)

நல்வார்த்தை நானூறில் முதல் சதகம் முற்றிற்று.

---

# விளம்பரம்.

ஸம்ஸ்க்ருதம், ஹிந்தி, தேலுங்கு பாஷைகளில் திவ்யப்பிரபந்த வியாக்கியானங்கள்.

1. திருப்பல்லாண்டு பெரியாழ்வார் திருமொழி ஸம்ஸ்க்ருதம் ... 5 00
2. ,, ,, ஹிந்தி ... 6 00
3. திருப்பாவை, ஸம்ஸ்க்ருதம். 3 00 ஷை ஹிந்தி .... 4 00
4. திருப்பாவை, நாச்சியார் திருமொழி, பெருமாள் திருமொழி, திருச்சந்தவிருத்தம், திருமாலை, திருப்பள்ளியெழுச்சி, அமலனாதிபிரான், கண்ணிநுண்சிறுத்தாம்பு. இவை யெல்லாம் சேர்ந்து ஒரேஸம்புடம். ஸம்ஸ்க்ருதம் 10—00, ஹிந்தி ... 10 00
5. பெரியதிருமொழி 1, 2 பத்துக்கள் ஸம்ஸ்க்ருதமும் ஹிந்தியும் ... 3 50
6. பெரியதிருமொழி 10, 11 பத்துக்கள். ஸம்ஸ்க்ருதம் ... 2 00
   ஹிந்தி 2 00
7. திருவெழுகூற்றிருக்கை, சிறியதிருமடல், பெரியதிருமடல், ஸம்ஸ்க்ருதமும் ஹிந்தியும் ஒன்றுசேர்ந்த ஸம்புடம் ... 2 00
8. திருவாய்மொழி முதற்பத்து — விஸ்தாரமான ஸம்ஸ்க்ருத டீகையும், ஹிந்தி டீகையும் ஒரே ஸம்புடமானது அடுத்தமாதத்தில் வெளிவரும்.

(குறிப்பு:) மொத்தமாக 50 ரூ. செலுத்துபவர்களுக்கு நாலாயிர திவ்யப்பிரபந்தப் பூர்த்தியாக உபய வியாக்கியானங்களோடும் கிடைக்கும். ஸித்தமானவை இப்போதே கிடைத்துவிடும்; இனிமேல் அச்சாகுமவை மாதந்தோறும் கிடைத்துவரும். ஷை தெலுங்குபாஷைப்பதிப்பும் முதலாயிரம் முடிந்த மேலே திருவாய்மொழி டீகை அச்சாகி வருகிறது. இதற்கு மொத்த சந்தா ரூ. 30 மட்டும்.

http://acharya.org

# நல்வார்த்தைநானூறு—இரண்டாவது சதகம்

## — இந்த சதகம் முழுவதும் தத்வார்த்த பரமார்த்த ஸாரம் —

101. விசிஷ்டாத்வைத ஸித்தாந்தத்திற்கு ஒரு திறவுகோலும், தென்னாசார்ய
ஸித்தாந்தத்திற்கு ஒரு திறவுகோலும் முக்கியமாகத் தெரிந்துகொள்ளத் தக்கவை.
சரீராத்மபாவம் என்பது விசிஷ்டாத்வைத ஸித்தாந்தத் திறவுகோல். 'ஸர்வேச்வரன்
ஸகல சேதநா சேதநங்களையும் சரீரமாகக் கொண்டவன்' என்கிற உண்மையைச்
செவ்வனே தெரிந்துகொள்ளும் வேதாந்திக்கு ஸகல உபநிஷத் வாக்யங்களும் எளி
தாக அந்வயித்துவிடும், ஒன்றிலும் ஒரு அவத்யமும் தோன்றமாட்டாது—என்பது
சீரியதோர் கொள்கை. இதை நன்கு தெரிந்துகொண்ட வித்வான் முன்னிலையில்
எந்த மதாந்தரஸ்தனும் பங்கமடைந்தே தீர்வன் என்கிறார் வேதாந்த வாசிரியர்
*யத்யேதம் யதிஸார்வபௌமகதிதம்* இத்யாதியான ரஹஸ்யத்ரயஸார ச்லோகத்தினால்.

102. "எந்தவிதத்திலும் எம்பெருமானுடைய பெருமையிலேயே முழுநோக்கு"
என்பதே தென்னாசார்ய ஸித்தாந்தத்தின் ஸாரம் என்று தெரிந்துகொள்ளவேண்டும்.
இதுவே இந்த ஸம்பிரதாயத்திற்குத் திறவுகோல். இதர ஸம்ப்ரதாயங்களில் சேதந
னுக்கும் அவனுடைய காரியங்களுக்குமே ஆதிக்யம் தெரியவரும். இந்த ஸம்ப்ரதா
யத்தில் அப்படியன்றிக்கே ஸர்வேச்வரனுக்கும் அவனுடைய சிந்தனைக்குமே ஸர்வாத்
மநா ஆதிக்யம் தெரியவரும். இதனை ஸுப்ரஸித்தமானவொரு அனுஷ்டானத்தி
னால் நன்கு தெளியலாம். (அதனை அடுத்த வார்த்தையில் காண்க.)

103. தென்னாசார்ய ஸம்ப்ரதாயஸ்தர்கள் ஒருதடவை நமஸ்காரம் செய்வ
தென்றும் பிறர் பலதடவை நமஸ்காரம் செய்வதென்றும் காண்கின்றது. பகவானை
நமஸ்கரிப்பதென்பது மிகச் சிறந்ததொரு காரியமே. இதனை ஒரு தடவைக்குப் பல
தடவையாகச் செய்தால் நல்லதல்லவென்று யாரேனும் நினைக்க முடியுமோ? நமஸ்
கரிப்பவனுடைய கரணக்ராமமும் க்ருதார்த்தமாய், நமஸ்கரிக்கப்படுபவனான எம்பெரு
மானுடைய திருவுள்ளமும் ஸுப்ரஸந்நமாவதற்கு உறுப்பான காரியமன்றோ இது.
அப்படியிருக்க, ஒரு தடவைதான் நமஸ்காரம் செய்யவேணுமென்று ஒரு விரதமாகக்
கொண்டிருக்கவேண்டிய அவசியம் என்ன? என்று ஒவ்வொரு விவேகிக்கும் இந்த
சங்கை தோன்றும். இங்குத் தென்னாசார்யர்களின் திருவுள்ளம் கேண்மின்.
நம்மைப் பார்த்தால் நாம் எத்தனை தடவை நமஸ்கரித்தாலும் போராது. எம்பெரு
மானைப் பார்த்தால் ஒருதடவை நமஸ்கரிப்பதும் மிகையாகும். அப்பெருமான் கீதை
முதலியவற்றில் தன்னை அல்ப ஸந்துஷ்டனாகச் சொல்லிக்கொள்ளுகிறான். *பத்ரம்
புஷ்பம் பலம் தோயம்* இத்யாதிகள் அவனுடைய அமுத மொழிகளாகக் காண்
கின்றன. தேவதாந்தரங்கள் மிகவும் ச்ரமப்பட்டு ஆராதிக்கப்படவேண்டியவை
யென்றும், எம்பெருமான் ஆராதனைக்கு மிக எளியன் என்றும் ப்ரஸித்தம். ஆழ்
வார்கள் அவனுடைய பெருமையைப் பேசுமிடத்து *தொழுது மாமலர் நீர்சுடர்
தூபங்கொண்டு எழுதுமென்னுமிது மிகையாதலின்* என்றும், *தொழக் கருதுவதே
துணிவது சூதே* என்றும் இப்புடைகளிலே அருளிச்செய்கிறார்கள். *பூயிஷ்டாம்
தே நம உக்திம் விதேம* என்கிற உபநிஷத் வாக்யத்திற்கு "தே பூயிஷ்டாம் நம உக்தீம்
விதேம" என்று அந்வயம் காட்டி 'நமః என்று வாயினால் சொல்லுவதும் எம்பெரு
மான் திருவுள்ளத்தாலே மிகக் கனத்ததாகும்' என்று நம் பூருவர்கள் அர்த்தம் செய்
தருளுகிறார்கள். பட்டர் *அஞ்ஜலி பரம் வஹதே* என்கிறார். நாம் ஒரு அஞ்ஜலி
[illegible]ட்டாலும் அது அத்தலைக்குப் பெரிய பளுவாகத் தோன்றுமென்பதை
[illegible] காட்டுகின்றார். ஆகவே ஸ்வாராதனனான எம்பெருமான் முன்னிலையில் நாம்


http://acharya.org

பலகால் விழுந்தெழுந்தால் அவன் திருவுள்ளம் என்னாகுமோ? ‘நம்மையும் தேவதாந்தரங்களைப்போலே நினைத்துவிட்டார்கள் போலும்’ என்று அவன் திருவுள்ளம் புண்படலாகுமோ என்னவோவென்று அஞ்சி, “ஆராதனைக் கெளியன்” என்கிற அவனுடைய பெருமைக்குக் குறைவு வாராதபடி நடந்துகொள்வோமென்றே நமஸ்காரத்தில் ஆவ்ருத்தி ஸஹிக்கப்படவில்லை.

104. நாம் சேதநராகப் பிறந்திருக்கிறவாசிக்கு ஏதோ சைதந்ய கார்யமாக ஸ்வல்பம் செய்யக் கடமைப்பட்டிருக்கிறோம்; இது கார்யகரமேயன்று, அவன் திருவுள்ளத்திலிரக்கமே கார்யகரம்; அது நம்முடைய ஆகிஞ்சந்யமும் அநந்யகதித்வமுமடியாக விளையக்கூடியது; ஆகிஞ்சந்யத்துக்கு எதிராக அதிக ப்ரவ்ருத்திகளைக் காட்டினோமாகில் நாம் ஏதோ உபாயாநுஷ்டாநம் செய்கிறோமாகத் திருவுள்ளம்பற்றி எம்பெருமான் கைவாங்கி நிற்க நேரும்; அப்படி அவன் உதாஸீநனாகைக்கு நாம் அவகாசம் கொடுக்கலாகாது.

105. ‘உபாயாநுஷ்டானங்கள் செய்யும்படி அவனே சாஸ்த்ரங்களில் விதித்திருக்கும்போது அவற்றை யதேஷ்டமாக நாம் செய்தாலென்ன? செய்யவேண்டியது தானே’ என்று பிறர் நினைக்கலாம், தென்னாசார்யர்கள் அங்ஙனம் நினைப்பவர்களல்லர். *நெறி காட்டி நீக்குதியோ?* என்று நம்மாழ்வார் அருளிச்செய்தபடி, தன்னைவிட்டு நீக்குவதற்காக (நம்மை நன்கு சோதிப்பதற்காக) அவன் காட்டின வழிகளிலே நாம் கிடந்து துவளலாகாது; *காம்பறத்தலைசிரைத்து உன் கடைத்தலையிருந்து வாழுஞ் சோம்பரை யுகத்திபோலும் சூழ்புனலரங்கத்தானே* என்று தொண்டரடிப்பொடி யாழ்வாரருளிச் செய்தபடி திண்ணிதான அத்யவஸாயங் கொண்டிருப்பதே உற்றது—என்கிற உறுதி தென்னாசார்யர்களின் கருவிலேயே ஊறிக்கிடப்பதாகும்.

106. திருவாய்மொழியில் *பத்துடையடியவர்க் கெளியவன் பிறர்களுக்கு அரிய வித்தகன்* என்ற விடத்து ஈட்டில்—“நம்முடையவர்கள் எம்பெருமானையே உபாயமாகப் பற்றிநிற்க, அல்லாதார் அசேதந க்ரியாகலாபங்களைப் பற்றுகிறப்போலேயிறே துர்யோதனன் நிலை” என்றுள்ளது. இதனால் நம்முடையவர்கள்படியும் அல்லாதார்படியும் அறியத்தக்கது. மேலே அந்த பதிகத்திற்கு அடுத்த பதிகத்திலே (1-4-7) *என் பிழைத்தாள் திருவடியின் தகவினுக்கு* என்ற விடத்து ஈட்டில்—“தேவரீர் க்ருபைக்குத் தண்ணீர்த் துரும்பாக ஏதேனும் ப்ரதக்ஷிண நமஸ்காராதிகள் பண்ணிற்றுண்டோவென்று நம்பிள்ளை யருளிச்செய்யும்படி” என்றுள்ளது. இந்த ஸ்ரீஸூக்தியை நன்கு விமர்சிக்கவேணும். எம்பெருமானிடத்தில் தூதுவிடுகிற ப்ரகரணம் இது. என்ன தப்பு செய்துவிட்டதாக உபேக்ஷித்திருக்கிறீரென்று கேளுங்கோளென்று இங்கே மூலமுள்ளது. “நாங்கள் ஏதேனும் ப்ரதக்ஷிண நமஸ்காராதிகள் செய்துவிட்டதாக எண்ணி உபேக்ஷித்திருக்கிறீராவென்று கேளுங்கோள்” என்பதாக நம்பிள்ளை விவரணம் செய்தருளுகிறார். இதனால் ப்ரதக்ஷிண நமஸ்காராதிகள் செய்வது எம்பெருமானுடைய க்ருபைக்கு ப்ரதிபந்தகம் என்று ஸ்பஷ்டமாக விளங்குகின்றது. இப்படி யருளிச்செய்திருக்கிற நம்பிள்ளை பகவத்ஸந்நிதியில் ப்ரதக்ஷிண நமஸ்காராதிகள் செய்திருக்கமாட்டாரா? செய்திலர் என்றால் இதை யாரேனும் நம்ப முடியுமா? அது சாஸ்த்ரார்த்தந்தானாகுமா? எதற்காக இங்ஙனே நம்பிள்ளை யருளிச்செய்தார்? என்று விவேகிகள் விமர்சிக்க வேண்டுமன்றோ? விமர்சித்தால், அதிகப்ரவ்ருத்தி அவத்யமென்றதாகத் தேறும். இந்த ஸ்ரீஸூக்திக்கு இவ்வளவேதான் கருத்தாகக் கொள்ளத்தக்கது.

107. சிறிய திருமடலில் “செங்குறிஞ்சித் தாரார் நறுமாலைச் சாத்தற்குத் தான் பின்னும் நேராதனவொன்று நேர்ந்தாள்” என்றுள்ளது. இங்கு மூலத்தின்

http://acharya.org

மேல் அர்த்தமென்ன வென்றால், செங்குறிஞ்சி மாலையை யணிகின்ற 'சாஸ்தா' என்கிற தேவதாந்தரத்தை நோக்கி ஓர் அஞ்சலியும் பண்ணிவிட்டாள் என்பதாம். 'ஒன்று நேர்ந்தாள்' என்ற மூலத்திற்கு ஓர் அஞ்சலி செய்தாளென்று அர்த்தம். இங்கே "தான் பின்னும் நேராதன வொன்று நேர்ந்தாள்" என்ற சொற்சுவையை நோக்கிப் பெரியவாச்சான் பிள்ளை என்ன வியாக்கியானம் செய்தருளியிருக்கிறு ரென்றால்;

"(தான்) வருத்த விஷயத்திலே ஓர் அஞ்ஜலி பண்ணினல் அது ஸாதனத்தில் அந்வயிக்கில் செய்வதென்? என்றிருக்ககடவதான்"

என்று அருளிச்செய்துள்ளார். இந்த ஸ்ரீஸூக்தியோடுஞ் சேர்த்து முன்னே காட்டிய நம்பிள்ளை ஸ்ரீஸூக்திக்கு அர்த்தம் செய்யுமளவில் தென்னசார்யர்களின் திருவுள்ளம் புலப்படும். உபாயகோடியில் எள்ளளவும் அந்வயியாமல் ஸ்வரூபத்தளவிலே நிற்கும்படி சில செய்வதே உற்றது; எதையேனும் அதிகப்படியாகச்செய்தால் அது உபாய கோடியிலே அந்வயித்து ஆகிஞ்சந்யத்தைக் குலைத்து எம்பெருமானுடைய திருவருளுக்கு இடையூறாக நிற்குங்கொல்! என்கிற அதிசங்கை இவர்களுக்கு உள்ளதென்னுமிடம் விளங்காநின்றது.

108. எந்த விஷயத்திலும் சாஸ்த்ரங்கள் ஒரு வழியையே காட்டமாட்டா; பல வழிகளையும் காட்டி நிற்கும். ஒவ்வொரு அதிகாரிகள் ஒவ்வொரு வழியைப் பற்றி நிற்பது ஸஹஜம். "கொண்டிப் பசுவுக்குத் தடிகட்டி விடுவாரைப் போலே" இத்யாதி முமுக்ஷுப்படி ஸ்ரீஸூக்தியினலும் அவ்விடத்து வியாக்கியான ஸ்ரீஸூக்திகளாலும் தெளிவு பெறுக.

109. பகவத்க்ருபை நிர்ஹேதுகமா, ஸஹேதுகமா! என்பது ஒரு விசாரம். நம்முடைய நற்குண நற்செய்கைகள்காரணமாக எம்பெருமானுடைய திருவருள் தோன்றுகின்றதென்று ஒப்புக்கொண்டால் ஸஹேதுகம் என்றதாகும். அப்படியல்லாமல் அது தானே தோன்றுகின்றதென்று ஒப்புக்கொண்டால் நிர்ஹேதுகம் என்றதாகும், பகவத்க்ருபை, தானே தோன்றுகின்றதென்று எப்படி ஒப்புக்கொள்ள முடியும்? அப்படி தோன்றுவதானல் என்றைக்கும் எல்லார் விஷயத்திலும் தோன்றலாமே. அருளுக்கு இலக்காகாதார் ஒருநாளும் ஒருவரும் இல்லாதபடியன்றே இருக்க வேண்டும். அப்படி காணமையாலும், சில கால விசேஷங்களில் சில அதிகாரிகள் மீது மாத்திரம் அருள் தோன்றக் காண்கையாலும் அப்போது ஒரு ஹேதுவை முன்னிட்டுத் தோன்றினதாகவே கொள்ளவேணும். ஆகவே அருள் ஸஹேதுகமே யல்லது நிர்ஹேதுக மென்கைக்கு ஔசித்தியமில்லை யென்பது ஒருவாதம். இதைக் கேட்கும்போது இது யுக்தமேயென்று தோன்றும்.

110. அவனது மிகக் கனத்த அருளுக்கு ஹேதுவாக நம்மிடத்தில் என்ன சரக்கு உள்ளதென்று ஆராய்ந்து பார்த்தால் ஒரு அணுமாத்திரம் கிடைக்கக்கூடும். விஷயப்ரவணரான நாம் வேசிகளைப் பின்தொடர்ந்து அடிக்கடி கோவில்களிலே நுழைந்து புறப்பட நேரும். நம் வயலில் பட்டி மேய்ந்த பசுவை அடிப்பதாகத் துரத்திக்கொண்டு போம்போது அது ஒரு கோவிலை ப்ரதக்ஷிணஞ் செய்துகொண்டு ஓடுகிற வழியிலே அதை விடமாட்டாத ஆக்ரஹத்தாலே நாமும் அக்கோவிலை வலஞ்செய்து போகக்கூடும். சிசுபாலாதிகளைப் போலே நிந்தை செய்வதற்காக அடிக்கடி பகவானுடைய நாமங்களைச் சொல்லக்கூடும். இவ்விதமாகச் சில ஸுக்ருத விசேஷங்கள் காரணமாக எம்பெருமானருள் நம்மீது தோன்றிற்றென்றால் இதைக்கொண்டு ஸஹேதுகமென்று சொல்லிவிடலாமோ? கொடிய தண்டனைக்குரிய பாவங்களையன்றோ நாம் செய்திருப்பது. இதில் அதி ஸ்வல்பஸுக்ருதம் கலந்திருப்பதுகொண்டு எம்பெருமான் அருள்செய்தானென்றால் அநுக்ரஹோந்முகனை அவன் திருவுள்ளத்

http://acharya.org

தால் ஸஹேதுகமானால் ஆகலாம். "என்நன்றி செய்தேனா என்னெஞ்சில் திகழ்வதுவே" "என்னுணர்வினுள்ளேயிருத்தினேன் அதுவுமவனதின்னருளே" "வெறிதேயருள் செய்வர்" என்றிவைபோலும் பாசுரங்களையநுஸந்திக்கப் பிறந்த நம் நினைவால் நிர்ஹேதுகமேயாகக்கடவது.

111. நம்மிடத்தில் சில ஆத்ம குணங்கள் இருந்தாலுங்கூட அவற்றை அஸத்கல்பமாக நினைத்து 'அமர்யாத: க்ஷுத்ர: சலமதிரஸூயாப்ரஸவபூ:* ஈவிலாத தீவினைகளெத்தனை செய்தனன்கொல்* *பாவமே செய்து பாவியானேன்* என்று அநுஸந்திக்க வேண்டியதானாப்போலே பகவத்க்ருபைக்கு உறுப்பாக ஸ்வலபஹேதுக்கள் இருந்தாலுங்கூட அவற்றை நாம் அஸத்கல்பமாகவே நினைக்கவும் 'இவையும் இல்லாமலே அவன் அருள்செய்ய வல்லவன்' என்று அநுஸந்திக்கவும் ப்ராப்தமாகையாலே நிர்ஹேதுகமென்கிற ஸித்தாந்தமே நிலைநிற்கும்.

112. 'எம்பெருமானருளாகிற மிகச் சிறந்த பலனுக்கு இந்த ஹேதுக்கள் ஸத்ருசமன்று' என்று சொல்லலாமே தவிர, நிர்ஹேதுகமென்றே சொல்லிவிடலாகுமோ? என்று ஆக்ஷேபங்கள் விளைவதுண்டு. அறிவுடையார் அங்ஙனமேதான் சொல்லாநின்றார்கள். திருவாய்மொழியில் முதற்பத்தில் பத்தாந் திருவாய்மொழியில் எம்பெருமானுடைய நிர்ஹேதுக கருணையை ஆழ்வார் அநுபவித்து ஈடுபடுவதாக நன்கு விளங்குகின்றது. வேதாந்தவாசிரியரும் அவ்விடத்திற்கு *அவ்யாஜோதார பாவாத்* என்றுதான் ச்லோகமிட்டருளினார்.

113. ஸ்ரீவசநபூஷணம் நான்காவது ப்ரகரணம் ஆரம்பம்—"த்ரிபாத் விபூதியிலே பரிபூர்ணாநுபவம் நடவாநிற்க..........என் ஊரைச் சொன்னாய், என் பேரைச் சொன்னாய், என் அடியாரை நோக்கினாய், அவர்கள் விடாயைத் தீர்த்தாய் அவர்களுக் கொதுங்க நிழலைக் கொடுத்தாய் என்னுமாபோலே சிலவற்றை ஏறிட்டு மடிமாங்காயிட்டு ..........ஜந்ம பரம்பரைகள் தோறும் யாத்ருச்சிகம் ப்ராஸங்கிகம் ஆநுஷங்கிகமென்கிற ஸுக்ருத விசேஷங்களைக் கற்பித்துக்கொண்டு தானே அவற்றை ஒன்றுபத்தாக்கி நடத்திக்கொண்டு போரும்" என்று ஆச்சரியமான சூர்ணிகையொன்றில் எம்பெருமானுடைய விஷயீகாரத்தின் பரிசு வெகு அழகாக நிரூபிக்கப்பட்டுள்ளது. இந்த ஸ்ரீஸூக்தியின் சுவடறிந்த வேதாந்தவாசிரியர் இப்பொருளை அப்படியே அமையவைத்துப் பரமபத ஸோபாநத்தில் பணிப்பதாவது, "அஜ்ஞாத யாத்ருச்சிக ஆநுஷங்கிக ப்ராஸங்கிக ஸாமாந்ய புத்தி மூல ஸுக்ருத விசேஷங்களை வ்யாஜமாகக் கொண்டு விசேஷ கடாக்ஷம்பண்ணி" என்று.

114. எம்பெருமானை வசீகரிப்பதற்கு உபாயமாக சாஸ்த்ரங்களில் கர்ம ஜ்ஞான பக்தி ப்ரபத்திகள் கூறப்பட்டுள்ளனவென்பது ப்ரஸித்தம். சேதநர்களை ரக்ஷித்தருள்வதில் இயற்கையாகவே ருசியுடையனான எம்பெருமான் *ஸம்ஸாரதந்த்ர வாஹித்வாத் ரக்ஷ்யாபேக்ஷாம் ப்ரதீக்ஷதே* என்கிறபடியே இத்தலையில் சிறிது எதிர்பார்க்கிறானென்று சொல்லிவைத்தது. ஒரு பக்கத்தில் எம்பெருமானுடைய திருவாக்கைப் பார்த்தாலோ *நாஸௌ புருஷகாரேண நசாப்யந்யேந ஹேதுநா, கேவலம் ஸ்வேச்சயைவாஹம் ப்ரேக்ஷே கஞ்சித் கதாசந* என்று காண்கிறது. "நான் புருஷகாரத்தைக்கொண்டும் கடாக்ஷிப்பதில்லை, வேறு எந்த ஹேதுவையிட்டும் கடாக்ஷிப்பதில்லை; என்றைக்கோவொருநாள் யாரோவொரு அதிகாரியை என் இச்சையினாலேயே நான் கடாக்ஷிப்பேன்" என்பது மேலே காட்டின ச்லோகத்தின் பொருள். இங்ஙனம் பேசுகின்ற எம்பெருமானது திருவருளை ஸஹேதுகமென்று நினைக்க நாமார்? நம்பக்கல் கைம்முதல் கொண்டே எம்பெருமான் நம்மைக் காத்தருள்கின்றானென்று கொள்வது ஹேயமாகும். *மருவித்தொழும் மனமே தந்தாய்* *என்னைத் தீமனங் கெடுத்தாய்* என்கிற அநுஸந்தானம் அக்ருத்ரிமமாகக்கடவது.

http://acharya.org

115. ப்ரபத்தி உபாயமென்று ஒரு பிணக்கு. 'கடையில், சென்று எண்ணெய் வாங்கிக்கொண்டுவா' என்று கட்டளையிடப் பெற்றவொருவன் அது வாங்கக் கோணியையோ கூடையையோ எடுத்துக்கொண்டு புறப்பட்டானாகில் 'எண்ணெயின் ஸ்வரூபத்தையே இவன் தெரிந்துகொள்ளவில்லை போலும்' என்று திண்ணமாக எண்ணத்தடையில்லையன்றோ. அதுபோல, ப்ரபத்தி உபாயமென்று சொல்லப்புகுமவர்கள் ப்ரபத்தியின் ஸ்வரூபத்தையே உள்ளபடியறிந்திலர்போலும் என்றேகனக்க நினைக்கவேண்டியதாகும். ப்ரபத்தியாவது என்ன? *த்வமேவோபாய பூதோ மே பவேதி ப்ரார்த்தநாமதிः, சரணாகதிः * என்று சாஸ்த்ரம் சொல்லுகிறது. எம்பெருமானையே உபாயமாக அத்யவஸிக்குமதுவே ப்ரபத்தியென்பது. இத்தகையதான ப்ரபத்தியானது தன்னிடத்தில் உபாயத்வத்தை எங்ஙனே ஸஹிக்கும்? ப்ரபத்தி யென்கிற வஸ்து தேறும்போதே அதன் அநுபாயத்வமும் தேறியே தீரும். இதை வேதாந்தவாசிரியர் வெகு அழகாக நிரூபித்தருளுகிறார்; ந்யாய ஸித்தாஞ்ஜநத்தில் ஜீவபரிச்சேதத்தில்—* இயம் கேவல லக்ஷ்மீசோபாயத்வ ப்ரத்யயாத்மிகா, ஸ்வஹேதுத்வ நியம் ருந்தே கிம்புநஸ் ஸஹகாரிணம் * என்பது அவருடைய ஸ்ரீஸூக்திகளில் தலையானது. எம்பெருமானொருவனையே உபாயமாகக் கொள்வதாகிற இந்த ப்ரபத்தியானது தன்னிடத்தில் உபாயத்வ புத்தியைத் தடைசெய்கின்றது; ப்ரபத்திக்கே உபாயத்வமில்லாதபோது அதன் ஸஹகாரிகளானவற்றுக்கு அது இல்லை யென்னுமிடம் தனிப்படச் சொல்லவேணுமோ? என்பது இந்தச்லோகார்த்தம்.

116. சாஸ்த்ரங்களில் ஒன்று விதிக்கப்படுமானால் அது உபாயமாக (ஸாதனமாக) இருந்து தீரும் என்பது பொதுவானவொரு கொள்கை. உபாயமாக மாட்டாததை சாஸ்த்ரம் எதற்காக விதிக்கும்? எப்போது விதி ஏற்படுகிறதோ அப்போது விதிக்கப்படுகின்றவதின் உபாயத்வமும் கூடவே ஸித்திக்குமாதலால் சரம ச்லோகத்தில் * மாம் ஏகம் சரணம் வ்ரஜ * என்று விதிக்கப்படுகிற ப்ரபத்திக்கு உபாயத்வம் அநிவார்யம் என்று நினைக்கக்கூடியதுண்டு. இதனையும் ந்யாஸ திலகமென்கிற க்ரந்தத்தில் அவ்வாசிரியரே எடுத்துக்காட்டி அழகாக ஸமாதானமும் வகுத்துள்ளார். * ஹேதுர் வைதே விமர்சே * என்கிற ச்லோகம் காண்க. இதன் கருத்தாவது—ப்ரபத்தியானது விதிக்கப்பட்டிருப்பதனால் உபாயமென்று சொல்லவேண்டியிருந்தாலும் இங்கு அப்படி கொள்ளவேண்டா; ஒவ்வொரு வித்யையிலும் எம்பெருமானுக்கு ஒவ்வொரு ரூபம் அறியக்கடவதாயிருக்கிற கணக்கிலே இந்த ப்ரபத்தி வித்யையில் இதராநபேக்ஷ உபாயத்வம் (பிறிதொன்றை எதிர்பாராத உபாயத்வம்) அறியத்தக்க ரூபமாதலால்—என்று இந்த ச்லோகத்தில் நிரூபிக்கப்பட்டிருக்கின்றது.

117. ஸித்தோபாயமென்றும் ஸாத்யோபாயமென்றும் உபாயம் இருவகைப்படும். எம்பெருமான் ஸித்தோபாயமானாலும் ஸாத்யோபாயமாக ஒன்றை அங்கீகரித்தே யாகவேண்டுமென்பது ஒருவாதம். ஸாத்யோபாயமென்றால் "சேதநனுடைய முயற்சியால ஸாத்யமான உபாயம் என்று தானே பொருளாகும். உண்மையில் இது சேதநக்ருதியாலே ஸாத்யமானதா? என்று ஆராய்ந்தால் மேலெழுந்தவாரியில் அப்படிச் சொல்லலாமாயினும் * இசைவித்தென்னை யுன்தாளிணைக்கீழிருத்து மம்மானே * என்பது போன்ற பல பாசுரங்களைக் கண்டால் இது நம்முடைய முயற்சியால் ஸாத்யமன்றிக்கே ஸர்வேச்வரனுடைய க்ருஷிபலமாகவே விளையுமதாக உண்மை தெரிவதால் ஸாத்யோபாய மென்கிற வ்யபதேசமும் இதற்கு ஏலாது. இவ்விஷயம், 'ஸ்வீகாரந்தானும் அவனாலே வந்தது; ஸ்ருஷ்டி அவதாராதி முகத்தாலே பண்ணின க்ருஷிபலம்" என்கிற பிள்ளை லோகாசார்யருடைய ஸ்ரீஸூக்திக்குச் சார்பாக வேதாந்தவாசிரியர் பணித்த *நிதாநம் தத்ராபி ஸ்வயமகில நிர்மாண நிபுண:* இத்யாதி பரச்சத ஸ்ரீஸூக்தி ஸம்வாதியாகும். *வரத! தவ கலு ப்ரஸாதாத்ருதே சரணமிதி வசோபி மே நோதியாத் * என்ற கூரத்தாழ்வான் ஸ்ரீஸூக்தியும் தெளிவு பெறுத்தும். இதையெல்லாம் அதிவாதமாக நினைக்கலாகாது.

http://acharya.org

118. ஸ்வாமிந்! ஸ்வசேஷம் ஸ்வவசம் ஸ்வபரத்வேந நிர்ப்பரம், ஸ்வதத்த ஸ்வதியா ஸ்வார்த்தம் ஏவஸ்மிந் ந்யஸ்யஸி மாம் ஸ்வயம்" என்பதும் வேதாந்தவாசிரியருடைய ஸூக்தி. இதில் ஒன்பதின்கால் ஸ்வசப்த ப்ரயோகம் பண்ணியிருக்குமழகு காண்க. இதனால் சேதநனுடைய முயற்சிநாற்றம் வேரற அறுக்கப்படுகின்றமையறிந்தால் உபாயமென்றும் ஸாத்யோபாயமென்றும் வாய்திறக்க வழியேயில்லை என்பது எளிதிலுணரப்பட்டதாகும்.

119. ரத்னம் என்கிற ஒரு வஸ்துவை எடுத்துக்கொள்வோம். இது ஜீவனத்திற்கு உபாயமா? அன்று? என்று விசாரம் வரின், ஒரு அதிகாரிக்கு உபாயம், மற்றொரு அதிகாரிக்கு அநுபாயம் என்றுதானே சொல்லவேண்டியதாகிறது. ஏனெனின்; வாணிஜ்யத்தை ஜீவிகையாகவுடையவர்கள் ரத்னத்தை விற்று ஜீவிக்கக் காண்கிறோமாதலால் அத்தகைய அதிகாரிகளுக்கு ரத்னம் உபாயமே. சக்ரவர்த்தி போல்வாரிடத்தில் அந்த ரத்னம் இருக்குமாகில் அது ஜீவநோபாயமாக ஆக்கப்படுகிறதன்றே. ஸ்வயம் போக்யமாகவன்றோ அணியப்படுகின்றது. இப்படி எந்தவஸ்துவும் அதிகாரி பேதத்தாலே உபாயமாகவும் போக்யமாகவும் நிற்கும். ப்ரபத்தியை நாம் உபாயமாகக் கொள்ளப் பிறந்தோமல்லோம். "ப்ரபத்தியை" என்று விசேஷித்துச் சொல்லவேண்டியதுமில்லை; எதுவும் நமக்கு உபாயமன்று. எந்த நன்மையும் ஸ்வரூபத்தில் சேர்ந்ததாகவே கொள்ளப்படுகிறது.

120. பகவத்ப்ரவ்ருத்தி விரோதி ஸ்வப்ரவ்ருத்தி நிவ்ருத்தியே ப்ரபத்தி" என்பது நம் ஆசார்யர்களின் ஸூத்ரம். அசித்வ்யாவ்ருத்த வேஷமாகவும் ஸ்வரூபாதிரேகி யல்லாதபடியாகவும் உள்ளதற்குமேலே மிகையான ப்ரவ்ருத்திகள் நேர்ந்தால் ஸ்வரக்ஷணே ஸ்வாந்வயமுள்ளதாக எம்பெருமான் திருவுள்ளம்பற்றி நம்மை ரக்ஷிப்பதில் தான் கைவாங்கி நிற்கநேரும். ஆகவே இங்ஙனம் பகவத்ப்ரவ்ருத்திக்கு விரோதியாகக்கூடிய ஸ்வப்ரவ்ருத்தியில் நின்றும் நிவ்ருத்தியடைவதே ப்ரபத்தியாம். இவ்வர்த்தத்தைக் கூரத்தாழ்வான் * க்ஷாம்யஸ்யஹோ ததபிஸந்தி விராமமாத்ராத் * என்கிற ஸ்ரீஸூக்தியால் காட்டியருளினர். *சசால சாபஞ்ச முமோச வீர:* என்கிற ஸ்ரீராமாயண ச்லோகத்தைக் கொண்டும் இதை ரஸமயமாக்கியருளிச் செய்வர்கள். "வனத்திடரை ஏரியாம் வண்ணமியற்று மிதுவல்லால் மாரி யார் பெய்கிற்பார் மற்று" என்கிற பூதத்தாழ்வார் பாசுரத்தின் சுவடறியவேணும்.

121. * உபபந்தேச் ச * (3-2-4.) என்கிற ப்ரஹ்மஸூத்திரத்தின் பாஷ்யத்திலே—"ப்ராப்யஸ்ய பரமபுருஷஸ்ய ஸ்வப்ராப்தௌ ஸ்வஸ்யைவ உபாயத்வோபபத்தே:" என்று தொடங்கி த்வார்த்த முணர்த்துமிடத்தில் * நாயமாத்மா ச்ருதியை உதாஹரித்துத் தெளிவு பிறப்பித்தருளியிருப்பது நமக்கு நித்யாநுஸந்தான யோக்யமானது * பலமத உபபத்தே: * (3—2—37.) என்கிற ஸூத்திரத்தின் பாஷ்யத்திலும்—"ஸ ஏவ ஹி ஸர்வஜ்ஞ: ஸர்வசக்திர் மஹோதார:" இத்யாதிகள் அருளிச் செய்திருப்பது மப்படியே.

122. வாணிஜ்யாதிகளுக்கு த்ரவ்யார்ஜந ஸாதநத்வவ்யபதேசம் போலே ப்ரபத்திக்கும் மோக்ஷோபாயத்வவ்யபதேசம் கூடுமென்றும், உட்புகுந்து ஆராய்ந்து பார்த்தால் "* உன் மனத்தா லென்னினைந்திருந்தாயென்கிறபடியே ப்ராப்திக்கு உபாயம் அவன்னினைவு" என்று கொள்வதே பொருந்துமென்றும் ஸகலாசார்ய ஸித்தாந்தமாகத் தேறுகின்றது. "எம்பெருமானே! எம்பக்கலில் ஏதேனும் ஒரு உபாயத்தைக் கொண்டே எம்மைக் கைக்கொள்ளவேணுமென்று நிர்ப்பந்தமுண்டாகில், செயல்மாண்டு நிற்கையாகிற சரணாகதி தவிர வேறொன்றும் எம்பக்கல் இல்லாமையாலே இதனையே தான் நீ உபாயமாகக் கொள்ளவேணும்" என்று நம் ஆசாரியர்கள் ஸ்தோத்திரங்களிலே அருளிச்செய்வதுண்டு. இந்த அபிப்பிராயங் கொண்டே ப்ரபத்த்யுபாயம், ப்ரபத்த்யுபாயம் என்கிறது.

http://acharya.org

123. வேதாந்தவாசிரியருடைய ஸூக்திகளில் "குணக்ஷதலிபிக்ரமாத் உபநிபாதிந: பாதிந:" என்பது ஒரு அற்புதமான ஸ்ரீ ஸூக்தி. "புழு குறித்தது எழுத்தாமாப்போலே" என்ற பெரியவாச்சான் பிள்ளையின் ஸ்ரீஸூக்தியை இங்ஙனே ச்லோகமாக்கி யருளினர். புழுவானது நிலத்தில் செல்லும்போது ஒரு எழுத்து எழுதவேணுமென்கிற எண்ணம் அதற்கு இல்லை; ஆனாலும், அதன் செல்லுகையை நாம் உற்று நோக்கினால் ஏதேனும் ஒரு எழுத்து தேறினதாக ஆகக் கூடும். இதற்கு குணாக்ஷர ந்யாயமென்று பெயர். இந்த ந்யாயத்தாலே யாத்ருச்சிகமாக நல்லதாய் முடிகின்ற நமது செயலை வியாஜமாகக்கொண்டு எம்பெருமான் ஸ்வீகரிக்கிறான். அதனை உபாயமென்று ஸாதிக்க நினைப்பது ஸமஞ்ஜஸமன்று. ப்ரபத்தி உபாயம் என்று சொன்னாலும் குற்றமில்லை. ப்ரபத்தியே பரிக்ராஹ்ய மென்ற பொருளில் ப்ரபத்த்யுபாயமென்கிற தத்தனை.

124. அர்த்த பஞ்சகத்தில் "ப்ராப்யஸ்ய ப்ரஹ்மணோ ரூபம்" என்பது முதலர்த்தமாகவும், "ப்ராப்துச்ச ப்ரத்யகாத்மந:" என்பது இரண்டாமர்த்தமாகவு முள்ளது. இதனால் ஜீவாத்மா ப்ராப்தா என்று விளங்குகின்றது. "ப்ரஹ்மவி தாப்நோதி பரம்" என்கிற உப நிஷத்வாக்யமும் ஈச்வரனை ப்ராப்யனென்றும், சேதநனை ப்ராப்தாவென்றும் ஸ்பஷ்டமாகச் சொல்லி யிருக்கையாலே 'ஈச்வர லாபம் சேதநனுக்குப் புருஷார்த்தம்' என்றே க்ரஹிக்கநேரும். ஆனால் உண்மை அதுவன்று; "ஈச்வரனுக்கு சேதநலாபம் புருஷார்த்தம்" என்பது எம்பெருமானார் தரிசனத்தின் அந்தரங்கமான பொருள்.

125. வேதாந்தவாசிரியருடைய திருவுள்ளமும் சேதநலாபம் ஈச்வரனுக்குப் பேறு என்பதே யாம். இதனை அவர் கீதாதாத்பர்ய சந்த்ரிகையில் வெகு அழகாகக் காட்டியுள்ளார். கீதையில் ஒன்பதாமத்யாயத்தின் முடிவிலுள்ள * மந்மநா பவ * என்கிற ச்லோகத்தின் பாஷ்யத்திற்கு விவரணமெழுதுகையில்—ஆச்ரித ஸம்ரக்ஷணம் ஸ்வலாபம் மத்வா ப்ரவர்த்தநே" என்றருளியிருப்பது காண்க.

126. "ப்ராப்தாவும் ப்ராபகனும் ப்ராப்திக்கு உகப்பானும் அவனே" என்பது ஸ்ரீவசநபூஷண ஸ்ரீஸூக்தி. சேதநனைப் பெறுவது ஈச்வரனுக்குப் பேறு என்றால் இவ்வர்த்தம் ஹ்ருதயத்தில் அவகாஹிப்பது சிரமமேயாகும். ஆனாலும் எளிதாக உணர்த்துகிறோம். சேதநன் முக்தனாகிப் பரமபதத்தில் சென்றபின் அங்கு என்ன கோஷிக்கிறானென்பதை நம் உபநிஷத்து தெளிவிக்கின்றது. "அஹமந்ந மஹமந்ந மஹமந்நம்" என்பது முக்தனுடைய முதல் வார்த்தை. 'பகவானுக்கு நான் அன்னமாகிறேன்' என்று ஒரு தடவைக்கு மூன்று தடவையாக இதில் சொல்லுகிறது. இதனால் ஈச்வரனானவன் சேதனனைப் பெற்று அநுபவிக்க வேணுமென்றும், பெரும்பசி கொண்டிருந்தானென்றும், அப்பசி, முக்தாத்மாவால் தீருகிறதென்றும் ஸ்பஷ்டமாகிறது. இல்லையாகில் 'அஹமந்நம்' என்று ஓதவேண்டியதில்லையன்றோ.

127. ["அஹம் அந்நாத: அஹம் அந்நாத: அஹம் அந்நாத:"] என்றும் உடனே வருகிறது. எம்பெருமானுக்கு இவன் அன்னமாகி அவன் பசியைத் தீர்த்தபிறகு இவனும் தன்பசிதீருவதாக ஓதிற்று. "அஹமந்நம் அந்நமதந்தமத்மி" என்கிற மேல் வாக்கியத்தினாலும் இது விவரிக்கப்படுகிறது. இதன் தாற்பரிய மென்னவென்றால், முக்தனாகிய தன்னை யநுபவித்து எம்பெருமான் விடாய்தீர்ந்து மகிழ்ந்து நிற்கையில் அந்த மகிழ்ச்சியைக் கண்டுதான் மகிழ்கிறான். இவன் அசேதநனல்லாமல் சேதநனாய் ஞானானந்தங்களை வடிவாக வுடையனாயிருக்கையாலே தன்னுடைய ஆனந்தமும் பயன் பெற்றதாக வேணுமே. அசித்திற்காட்டில் ஒரு வாசி ஏற்படவேணுமே. தன்னைப்பெற்று எம்பெருமான் ஆனந்திப்பதைக் கண்டு 'நம்மால் எம்பெருமானுக்கு இப்படியொரு ஆனந்த முண்டாயிற்றே!' என்று அநுஸந்தித்து அதனால் தான்

http://acharya.org

ஆநந்திக்கையே ப்ராப்தம். 'அஹமந்நாத:' 'அஹமந்நமந்நமதந்த மத்மி' என்ற உபநிஷத்தின் கருத்து இதுவேயாம்.

128. ஆழ்வாருடைய திருவாய்மொழியில் *வாரிக்கொண்டு உன்னை விழுங்குவன் காணிலென்று, ஆர்வுற்ற என்னை யொழிய என்னின் முன்னம் பாரித்துத், தானென்னை முற்றப் பருகினான்.* (9—6—10) என்கிற பாசுரம் சிகரமானது. ஆசார்ய ஹ்ருதயத்தில் (2—18) *பெரும்பாழில் க்ஷேத்ரஜ்ஞன் பெருஞ் செய்* இத்யாதியான பெரிய சூர்ணையில் இவ்வர்த்தம் அற்புதமாக நிரூபிக்கப்படுகிறது. அந்த சூர்ணை யாவரும் கண்ட பாடம் செய்யத்தக்கது.

129. ஸ்ரீராமாயணத்தில் *அபிஷிச்ய ச லங்காயாம் ராக்ஷஸேந்த்ரம் விபீஷணம், க்ருத க்ருத்யஸ் ததா ராமோ விஜ்வர: ப்ரமுமோத ஹ* என்கிற சுலோக ரத்நத்தாலே வான்மீகி முனிவரும் வெளியிட்ட பரமார்த்தமிது. மகுடாபிஷேகம் பெற்ற விபீஷணாழ்வான் மகிழ்ந்தானென்று சொல்லவேண்டியிருக்க அங்ஙனம் சொல்லாமல் ச்லோகமமைத்திருக்கிற அழகை நோக்கவேணும். க்ருத க்ருத்யத்வமும் விஜ்வரத்வமும் ப்ரமோத சாலித்வமும் ஸ்வாமியான பெருமாளுக்கேயல்லது ஸ்வம்மான விபீஷணனுக்கில்லை யென்று விளங்கவைத்தார் வான்மீகி.

130. ஆத்மாவுக்கு சைதந்யாதிகமான போக்த்ருத்வமிருந்தாலும், பாரதந்த்ரியத்தையும் போக்யதையையும் ஸ்வரூபவுண்மையாகத் திருமந்திரத்தினால் கண்டறிந்தவனுடைய போக்த்ருத்வமாகில் அது, தன்னுடைய ரஸத்துக்கு உடலன்றிக்கே சேஷியினுடைய ரஸத்துக்கே உடலாயிருக்கும். *படியாய்க்கிடந்து உன் பவளவாய் காண்பேனே* என்கிற பெருமாள் திருமொழிப் பாசுரத்தில் "படியாய்க்கிடந்து" என்பதனால் அசேதந வ்ருத்தியும், "உன் பவளவாய் காண்பேனே" என்பதனால் சேதநவ்ருத்தியும் பிரார்த்திக்கப்பட்டன. இத்தலையை விநியோகங்கொண்ட எம்பெருமானுக்கு விளையும் உகப்பைக்கண்டு உகப்பது தவிர வேறுபயனில்லை சேதநனுடைய ஆநந்தித்வத்திற்கு என்பதே ஸாரமான பொருள்.

131. ஆளவந்தார் *கதாஹமைகாந்திக நித்ய கிங்கர: ப்ரஹர்ஷயிஷ்யாமி* என்கிற ஸ்தோத்ரரத்ந ஸ்ரீ ஸூக்தியால் ஸ்பஷ்டமாகக் காட்டியருளினார். இதில் ப்ரஹர்ஷயிஷ்யாமி என்கிற க்ரியாபதம் ஆச்சரியமாக அமைந்தது. நான் எப்போது ஆனந்திக்கப் போகிறேன் என்னாமல், நான் எப்பொழுது எம்பெருமானை ஆனந்திப்பிக்கப்போகிறேனென்று பேசியுள்ளார், ணிஜந்தப்ரயோகம் நோக்குக. இங்கு வியாக்கியானத்தில்—"தன்னுடைய அநுவ்ருத்தியால் ஈச்வரனுக்குப் பிறக்கும் ஹர்ஷமேயிறே சேதநனுக்கு ப்ராப்யம்" என்று பெரியவாச்சான் பிள்ளை அருளிச்செய்ததை வேதாந்தவாசிரியர் தமது ஸ்தோத்ர பாஷ்யத்தில் வெகு அழகாக விசதீகரித்தருளினார். *க்ருதார்த்தோஹம் பவிஷ்யாமி* "என்றும் மகிழ்வேனே" என வருமிடங்களில் இந்த நிர்ணயத்திற்கு அநுகுணமாகவே ஆசாரியர்கள் அர்த்த நிர்வாஹம் செய்து போருவர்கள்.

132. எம்பெருமானார் ஸ்ரீபாஷ்யத்தின் முடிவில் *அநாவ்ருத்திஸூத்ர பாஷ்யத்தில் "நச பரம புருஷஸ் ஸத்ய ஸங்கல்பஃ அத்யர்த்த ப்ரியம் ஜ்ஞாநிநம் லப்த்வா கதாசிதாவர்த்தயிஷ்யதி" என்கிற ஸ்ரீஸூக்தியினால் 'சேதநலாபமே ஈச்வரனுக்குப் பேறு' என்கிற ஸத்ஸம்ப்ரதாய ரஸ்ய ரஹஸ்யப் பொருளை ஸ்தாபித்தருளினார். அங்கே விஷயம் என்னவென்றால், மோக்ஷத்திற்குச் சென்ற சேதநன் திரும்பி வருதல் உண்டா இல்லையா என்று விசாரம் வந்தது. ஈச்வரன் கேட்பாரற்ற ஸ்வதந்திரனாதலால் அந்த ஸ்வாதந்திரியத்தினால் முக்தாத்மாவைத் திருப்பியனுப்பிவிடக் கூடுமன்றோ என்கிற சங்கையுண்டாக, ஸூத்ரகாரர் *அநாவ்ருத்திச்சப்தாத்* என்று ஸூத்ரமியற்றினார். முக்தாத்மா ஒருநாளும் திரும்பி வருவதில்லை யென்று

http://acharya.org

சாஸ்த்ரம் முறையிட்டிருக்கையாலே புநராவ்ருத்தி கிடையாதென்று ஸூத்ரகாரர் சொல்லி விட்டார்; பாஷ்யகாரரும் இவ்வர்த்தத்தை வியாக்கியானித்தார். ஆனால் தோன்றின சங்கைக்கு த்ருப்திகரமான ஸமாதானம் வந்ததாகவில்லை. ஸூத்ர பாஷ்யாவதாரிகையில் ஈச்வரன் ஸ்வதந்திர ஞையாலே கேட்பாரற்று முக்தாத்மாவை மீண்டும் கீழே தள்ளிவிட நினைத்தால் என் செய்வது? என்பது சங்காசரீரம். 'தள்ளமாட்டானென்று சாஸ்த்ரம் சொல்லியிருக்கையாலே' என்று விடை கூறினதால் என்ன ஸமாதானம் வந்ததாகும். சாஸ்த்ரத்தையும் மீறிச் செய்வதன்றோ ஸ்வதந்த்ரக்ருத்யம். அப்படிப்பட்ட ஸ்வாதந்திரியத்தாலே ஈச்வரன் ஒன்று செய்யப்புகுந்தால் சாஸ்த்ரம் குறுக்கே நிற்குமோ? என்றன்றோ இங்குப் பூர்வ பக்ஷியின் கருத்து. அதற்குத் தினவடங்கச் சொல்லவேண்டிய ஸமாதானத்தை ஸூத்ரகாரர் சொல்லாத குறைதீர நம் பாஷ்யகாரர் வெகு அழகாக அருளிச் செய்கிறார். ஈச்வரன் ஸ்வதந்திரனேயாகிலும் உன்மத்தனல்லன், மூர்க்கனல்லன், அரஸிகனல்லன். ஸத்யஸங்கல்பனென்று பேர்பெற்றவன். தன்னுடைய மநோரதத்திற்கு மாறுபாடாக நடந்து கொள்பவனல்லன். ஒரு சேதநனைப் பெறுவதற்கு அவன் என்னபாடு படுகிறான் தெரியுமோ? அவன் ஸ்ருஷ்டி பண்ணுவதும் அவதாரங்கள் பண்ணுவதும் சேதநரை லபிக்கைக்காகவன்றோ? எவ்வளவோ தவப்பயனாக ஒரு சேதநனை லபித்த பின்பும் ரஸிகனான பரம புருஷன் அவனை இழப்பனோ?—என்று இவ்வளவுமெழுதி நம் பாஷ்யகாரர் சங்காபரிஹாரத்தைத் தலைக்கட்டியுள்ளார். இதில் "பரம புருஷ: ஜ்ஞாநிநம் லப்த்வா" என்கிற ஸ்ரீஸூக்தி விந்யாஸமானது எம்பெருமானார் திருவுள்ளத்தில் திருவாய்மொழி யமுதக்கடல் அலையெறிகிறபடியை நன்கு காட்டுகிறது. கீதையில் *ஸ மஹாத்மா ஸுதுர்லப: என்று எம்பெருமான் தானே சோதி வாய்திறந்து பணித்ததையும் உடனே உதாஹரிக்கிறார். தாரக போஷக போக்யமானவை எல்லாம் கண்ணனென்றிருக்கிற மஹாத்மா மிகவும் துர்லபன் என்று பகவான் தன் திருவாக்காலே சொன்னால், அப்படிப்பட்டவொரு மா ஞானியை லபிக்கைக்கு அவன் எவ்வளவோ பாடு படுகிறவன் என்பது விளங்கவில்லையா? ஆகவே சேதந லாபமே ஈச்வரனுக்குப் பேறு என்கிற ஸித்தாந்தம் நன்கு பொலிந்ததாயிற்று.

133. யத்கிஞ்சித்ஸுக்ருதகரணம், பேற்றுக்கு த்வரிக்கை என்னுமிவையெல்லாம் நம் பக்கலில் அடியோடு வேண்டாவே? என்று பிறர் க்ஷேபிக்க வருவர்கள். சைதந்ய கார்யமாக விளையுமவை நம்மால் தடுக்க வொண்ணாதவை. அவையுங்கூட நம்மால் விளைவனவல்ல. "நிதாநம் தத்ராபி ஸ்வயமகில நிர்மாண நிபுண:" என்கிற வேதாந்தவாசிரியருக்தியால் இவ்வுண்மையும் திண்மைபெறும். ஸொத்தைப் பெற்று அனுபவித்து ஆநந்திக்க வேணுமென்கிற ஆவல் ஸ்வாமிக்கே உரியதாகவும் உள்ளதாகவும் உலகிற் காண்கிறோமாதலால் இந்த நியாயமேயாகும் இங்கும். ஆனால் ஜீவாத்மாவாகிற இந்த ஸொத்து சைதந்யமாகிற கல்மஷத்தோடும் கூடியிருக்கையாலே சிறிது தலையாட்டவும் வாலாட்டவும் பெறுகிறது. தன்னை நன்றாக வுணரும்போது தலைமடிந்து நிற்கிறது. நிலாத் தென்றல் சந்தனம் புஷ்பம் முதலியன போலே ஸர்வாத்மநா பாதந்திரியமாயிருக்கவேண்டிய ஜீவாத்மாவுக்கு சைதந்யமே இடையூறாக நிற்றலால் இதைக் கல்மஷமென்கிறது. .... ... *

134. சேதநன் தான் எம்பெருமானைப் பற்றுவதானது ஸ்வகத ஸ்வீகாரமென்றும், எம்பெருமான் தானே சேதநனை வரிப்பதானது பரகத ஸ்வீகாரமென்றும் சொல்லப்படுகிறது. அடைவே மர்க்கடகிசோர ந்யாயமென்றும் மார்ஜாரகிசோர ந்யாயமென்றும் வழங்குவர். பரகத ஸ்வீகாரமென்பதன் சுவையை அறியப்பெறாதவர்கள் 'இது அஸம்பிரதாயப் பேச்சு' என்பர். அது கிடக்க. கீதா பாஷ்யத்தில் எம்பெருமானார் தெளிவித்தருளின மஹார்த்தம் இது. அதில்


http://acharya.org

எட்டாவது அத்யாயத்தில் பதினான்காவது ச்லோகம்— *அநந்யசேதாஸ் ஸததம் யோ மாம் ஸ்மரதி நித்யச:, தஸ்யாஹம் ஸுலப: பார்த்த! நித்யயுக்தஸ்ய யோகிந:* 'ஜ்ஞாநீது ஆத்மைவ மே மதம்' என்று பகவான் தான் தனக்கு உயிர்நிலையாகக் கொண்டாடும் ஞானியானவன் தன்னை உபாஸிக்க வேண்டியபடியையும் பேறு பெறும் பரிசையும் இனி யருளிச்செய்கிறான் கண்ணபிரான் என்று அவதாரிகை யிட்டு சுலோகத்தை வெகு அழகாக வியாக்கியானித்தருளியுள்ளார் ஸ்ரீபாஷ்யகாரர். இந்த சுலோகத்தின் கருத்து என்னவென்றால், அர்ஜுநா! எவன் இடைவிடாமல் எப்போதும் வேறொன்றிலும் நெஞ்சைச் செலுத்தாதவனாய் என்னையே ஸ்மரிக்கிறானோ, என்னோடு நித்யஸம்ச்லேஷத்தை விரும்பியிருக்கின்ற அந்த பக்தனுக்கு நான் ஸுலபன்—என்பதேயாம். இதில் (தஸ்யாஹம் ஸுலப:) அவனுக்கு நான் எளியன் என்கிற பகுதிக்கு பாஷ்யம் செய்தருளியிருக்கின்ற அழகை என்சொல்வோம்! அவ்விடத்து பாஷ்யபங்க்திகளின் பொருளாவது—என்னோடு எப்போதும் கூடியிருக்க வேணுமென்கிற விருப்பமுடையவனுக்கு அடையத் தகுந்தவன் நானே யாகிறேன். மிக எளிதாக அடையத்தகுந்தவனுமாகிறேன் நான்; (அதாவது) அவனுடைய பிரிவைப் பொறுக்கமாட்டாதவனாய் (அவனைப் பிரிந்து தரித்திருக்கமாட்டாதவனாய்) நானே அவனை வரிக்கிறேன். என்னையடைவதற்கான உபாஸனத்தின் பரிபக்குவ நிலைமையையும் அதற்குற்ற இடையூறுகள் நீங்குதலையும் என்னிடத்தில் அதிகமான ப்ரீதி முதலியவைகளையும் நானே கொடுக்கிறேன். *நாயமாத்மா ச்ருதியில் இவ்வர்த்தம் ப்ரஸித்தமாயிருப்பதோடு இந்த கீதையிலேயே மேலே பத்தாவது அத்தியாயத்தில் 10, 11 சுலோகங்களாலும் சொல்லப்படுகிறது—என்பதாம். ஸத்ஸம்பிரதாய ஸாரார்த்தம் இங்கே பொதிந்திருக்குமழகு காண்க.

135. ஸ்ரீவசநபூஷணத்தில் 142 "இவன் அவனைப்பெற நினைக்கும்போது பாதகமும் விலக்கன்று" என்று அருளிச்செய்த விடத்தில் வியாக்கியானத்தில் மணவாள மாமுனிகள்—"உடைமையை உடையவன் சென்று கைக்கொள்ளுமா போலே ஸ்வாமியான அவன் தானே வந்து அங்கீகரிக்கக் கண்டிருக்கக்கடவ பரதந்த்ரனான இச்சேதநனானவன் தான் பலியாய் தன் ஸ்வீகாரத்தாலே ஸ்வதந்த்ரனான அவன், ஸ்வம்மாய் பரதந்த்ரனாயிருக்கிற இவனை ஸ்வேச்சையாலே பெற நினைக்குமளவில் பாதகமும் பிரதிபந்தகமாகமாட்டாதென்கை. இவையிரண்டாலும் ஸ்வகதஸ்வீகாராநுபாயத்வமும் பரகதஸ்வீகாரோபாயத்வமும் காட்டப்பட்டது." என்றருளிச் செய்திருக்கும் ஸ்ரீஸூக்திகள் மேலே காட்டிய கீதாபாஷ்ய ஸ்ரீஸூக்திகளையே அடியாகக்கொண்டவையென்று நன்கு புலப்படுகின்றது. மணவாள மாமுனிகள் முன்பு ஒரு வேஷத்தாலே கீதாபாஷ்யத்தில் வடமொழியாலே அருளிச்செய்ததை பின்பு மற்றொரு வேஷத்தாலே ஸ்ரீவசநபூஷண வியாக்கியானத்தில் தென்மொழியாலே அருளிச்செய்தாரென்று அறுதியிடத் தட்டில்லை.

136. மேலே பொருள் விவரிக்கப்பெற்ற கீதாபாஷ்ய மூல ஸ்ரீஸூக்தியில் ஒவ்வொரு வாக்கியமும் ஸாரமானது. *தத்வியோகம் அஸஹமாந: அஹமேவ தம் வ்ருணே* என்பது கீதாபாஷ்ய ஸூக்தி. ஞானியான சேதநனைப் பிரிந்திருப்பதை எம்பெருமான் தான் பொறுத்திருக்க மாட்டாதவனாய்த் தானே அந்த சேதநனை வரிப்பதாகக் கூறுகின்றவிதுதான் பரகத ஸ்வீகாரமென்பது. *மத்ப்ராப்த்யநுகுணோபாஸந விபாகம் அஹமேவ ததாமீத்யர்த்த:* என்கிற அடுத்த வாக்கியமானது ஸ்வகத ஸ்வீகாரப் பற்றாசை நன்றாகக் கழிக்கிறது. இத்தலையில் விளைவதெல்லாம் எம்பெருமானுடைய க்ருஷிபலமாக விளைகின்றதேயன்றி இவன் தலையாலே விளைவித்துக் கொள்ளுமது ஒன்றுமில்லையென்கிற ஸத்ஸம்ப்ரதாய ஸாரார்த்தம் தெளிவிக்கப்பட்டது. இந்த இடத்தில் *நாயமாத்மா ச்ருதியையும் எடுத்துக்காட்டியருளுகிறார் பாஷ்யகாரர். பரகதஸ்வீகாரத்திற்கு அதுவே பிரமாணமென்று நிரூபிக்கிற முகத்

http://acharya.org

தாலே பிறருடைய சிலசில வாதங்களையும் அகற்றினாராயிற்று. இவ்விடத்தில் தாத்பர்ய சந்த்ரிகையில் வேதாந்தவாசிரியர் அருளிச்செய்துள்ள திவ்ய ஸூக்திகளும் தெள்ளியவே. *உக்தஸ்ய அதிவாதமாத்ரத்வ சங்காவ்யுதாஸாய ச்ருதிமூலதா மாஹ *யமேவேதி." என்றருளிச் செய்திருப்பது ஆழ்ந்து நோக்கத்தக்கது.

137. இவ்விஷயத்தில்ஸாரமாகத் தெரிந்துகொள்ள வேண்டியது இவ்வளவே; *த்வத்பாதமூலம் சரணம் ப்ரபத்யே* என்றும் *புகலொன்றில்லாவடியேன் உன்னடிக் கீழமர்ந்து புகுந்தேனே* என்றும் சொல்லிக்கொண்டு (அதாவது நாம் பற்றுகிறோமாகக் காட்டிக்கொண்டு) திருவடிகளிலே விழுந்தாலும், 'இது நாம் பற்றின பற்றன்று; எம்பெருமான் தானே பற்றுவித்தானத்தனை: அவனுடைய க்ருஷி பலித்ததத்தனை' என்று உள்ளூர அநுஸந்திக்க ப்ராப்தம். இதையிட்டே பரகத ஸ்வீகாரமென்கிறது. ... .... .... .... *

138. "பகவத்ப்ரவ்ருத்தி விரோதி ஸ்வப்ரவ்ருத்தி நிவ்ருத்தியே ப்ரபத்தி" யென்று நம் பூருவாசாரியர்கள் அருளிச்செய்ததானது பரமஸித்தாந்தமானதொரு ஸூக்ஷ்மார்த்த விசேஷம். இது ஒரு புறமிருக்க, "ஆத்ம ஸமர்ப்பணம் ப்ரபத்தி" என்பதுமொன்றுண்டு. "எனதாவி தந்தொழிந்தேன்" "தோள்களையாரத் தழுவி யென்னுயிரை அறவிலை செய்தனன்" என்று ஆழ்வாரும் * அஹம் அத்யைவ மயா ஸமர்ப்பிதः * என்று ஆளவந்தாரும் அருளிச்செய்த கணக்கிலே ஆத்ம ஸமர்ப்பணத்தையும் ப்ரபத்தியாகக் கொள்ளக் கடவதாகையாலே இதுதன்னை நிரூபித்துப் பார்த்தால் இதை அபராத கோடியிலே எண்ணவேண்டுமென்பர் நம் ஆசிரியர்; அப்படிச் சொல்வது அபசாரமென்பர் பிறர். உண்மையில் இது அபராத கோடியிலேயே சொருகி நிற்கும். *எனதாவி தந்தொழிந்தேன்* என்றவுடனே அதற்கு அநுதபித்து "எனதாவி யார் யானார் தந்த நீ கொண்டாக்கினையே" என்று ஆழ்வார் அருளிச் செய்திருக்கையாலும், ஆளவந்தாரும் "அஹமத்யைவ மயா ஸமர்ப்பித:" என்றபின் "மம நாத யதஸ்தி யோஸ்ம்யஹம் ஸகலம் தத்தி தவைவ மாதவ!, நியதஸ்வமிதி ப்ரபுத்ததீ: அதவா கிம்நு ஸமர்ப்பயாமி தே" என்று அநுதபித்து உண்மையை வெளியிட்டிருப்பதாலும், ஆத்மஸமர்ப்பணம் அபராதகோடியிலேயே சேரும். ஆளவந்தாருடைய திருவுள்ளத்தை நன்கு விவரிக்கிறோம் காண்மின்; 'மயா அஹம் ஸமர்ப்பித:" என்று முந்துற ஆத்மஸமர்ப்பணம் பண்ணினதாக அருளிச்செய்தார். உடனே இப்படி சொல்வதற்கு எனக்கு என்ன அதிகாரமுளது? நான் என்கிற வஸ்துவும் என்னுடையது என்கிற ஒரு வஸ்துவும் ஸ்வதந்த்ரமாக வுண்டோ? "யானே நீ என்னுடைமையும் நீயே" என்றபடி எல்லாம் ஏற்கெனவே உன்னுடையதாகவே இருக்கும்போது, இந்த ஆத்ம வஸ்து உனக்கு இல்லாதது போலவும் இப்போதுதான் என்னால் புதிதாக ஸமர்ப்பிக்கப்படுவது போலவும் பேசிவிட்டேனே பாவியேன்; ஸமர்ப்பிப்பதற்கு நானார்? ஸமர்ப்பிக்க என்னிடம் என்ன இருக்கிறது? அதிலும் உனக்கு நான் ஸமர்ப்பிக்க என்னவுண்டு? இவ்விஷயங்களை ஆராயாமல்தானே அவிவேகியாய் 'அஹமத்யைவ மயா ஸமர்ப்பித:' என்று பிசகாகப் பேசிவிட்டேனே! என்று அனுதாபம் காட்டி *மம நாத யதஸ்தீத்யாதியான அடுத்த ச்லோகம் அருளிச்செய்தாராயிற்று. இங்கு, கீழ்ச்லோகத்தில் ஆத்மஸமர்ப்பணம் பண்ணினதாகவும் அதைப்பற்றி இந்த ச்லோகத்தில் அநுதபித்ததாகவும் முடிந்தது. ஆகவே ஆத்ம ஸமர்ப்பணம் அபராத ரூபமென்றதாகிறது. "ஸர்வாபராதங்களுக்கும் ப்ராயச்சித்தமான ப்ரபத்திதானும் அபராத கோடியிலேயாய் க்ஷாமணம் பண்ணவேண்டும்படியில்லா நின்றதிறே. (147) நெடுநாள் அந்ய பரையாய்ப்போந்த பார்யை லஜ்ஜா பயங்கள் இன்றிக்கே பர்த்ரு ஸகாசத்திலே வந்து நின்று என்னையங்கீகரிக்க வேணுமென்று அபேக்ஷிக்குமாபோலே யிருப்பதொன்றிறே இவன் பண்ணும் பிரபத்தி" என்பன ஸ்ரீவசநபூஷண திவ்யஸூக்திகள். இங்கு வியாக்கியானத்தில் மணவாள மாமுனிகளின் விவரணத்தை யநுபவித்துத் தெளிக.

http://acharya.org

139. நம்மாழ்வாரும் ஆளவந்தாரும் முன்னம் ஆத்ம ஸமர்ப்பணம் பண்ணிப் பின்னை அதற்காக அநுதபித்தார்களென்றும் ஆகவே ஆத்ம ஸமர்ப்பணம் அபராத ரூபமென்றும் சொல்லுகிற பக்ஷத்தில், அநுதாப யோக்யங்களான பாபங்களைப் போலே ஆத்ம ஸமர்ப்பணமும் ஒரு பாபமாகவன்றோ தேறுகிறது; அது செய்யக் கூடாத காரியம் என்று ஏற்பட்டு விடாதா? இவ்விஷயம் ஆழ்வார்க்கும் ஆளவந் தார்க்கும் முன்னம் தெரியாமையில்லையே; தெரிந்து பாபத்தைப் பண்ணுவானேன்? பிறகு அநுதபிப்பானேன்? "ப்ரக்ஷாளநாத்தி பங்கஸ்ய தூராத் அஸ்பர்சநம் வரம்" =முன்பு சேற்றில் காலைவைத்துப் பின்பு அதை அலம்புவதைக்காட்டிலும் சேற்றில் காலை வைக்காமலே யிருந்துவிடலாமே என்கிறப்போலே ஆத்ம ஸமர்ப்பண மென்கிற பேச்சையே ப்ரஸ்தாவியாமலிருந்து விடலாமே என்கிற வாதங்கள் இங்கு விளையக்கூடியதுண்டு. இதற்கு ஸமாதானமாகப் பெரியவாச்சான்பிள்ளை யருளிச் செய்வது பாரீர்:—"[தே கிம்நு ஸமர்ப்பயாமி] இத்தையுடைய உனக்கு எத்தை ஸமர்ப்பிப்பேன்? ஸமர்ப்பணீய மேது? ஸமர்ப்பகர் ஆர்? ஸமர்ப்பணீயமாகைக்கு ஸ்வாம்யமில்லை. ஸமர்ப்பிக்கைக்கு ஸ்வாதந்த்ர்யமில்லை ஸம்ஸார பீதியால் ஸமர்ப் பிக்கையும் ஸ்வரூப யாதாத்ம்ய ஜ்ஞாநத்தால் அநுசயிக்கையுமாக இரண்டும் யாவந் மோக்ஷம் அநுவர்த்திக்கக் கடவது" என்று. இதனால் தேறினது என்னவென்றால் ஆத்ம ஸமர்ப்பணம் பண்ணுகையும், அது பண்ணினதற்காகப் பிறகு அநுதாபம் காட்டுகையுமாகிற இரண்டும் சாஸ்த்ரார்த்தம் என்றதாகத் தேறிற்று. "முந்துற ஆத்ம ஸமர்ப்பணம் பண்ணவேணும், பின்னை அநுதாபமும் படவேணும்" என்றால் இது நன்றாக இல்லையே. தப்பான காரியத்திற்கன்றோ அநுதபிக்க வேண்டுவது" என்றே இன்னமும் பலருடைய நெஞ்சு தளும்பியே யிருக்கும். கேண்மின்; இந்த ஸ்தோத்ர ரத்னத்திலேயே கீழே முப்பத்திரண்டாவது ச்லோகம் முதற்கொண்டு நாற்பத்தாறும்ச்லோகமளவும் பதினன்குச்லோகங்களாலே எம்பெருமானுடைய நித்ய கைங்கரியத்தைப் பரம புருஷார்த்தமாகப் பிரார்த்தித்த ஆளவந்தார் தாமே அடுத்த (47) "திக்அசுசி மவிநீதம்" என்கிற ச்லோகத்தால் கீழே அப்படி பிரார்த்தித்ததற்கு மஹத்தான அநுதாபத்தை ஆவிஷ்கரித்திருக்கின்றாரென்பது அபரோக்ஷம். இங்கு ஆராயவேண்டுமே. கைங்கர்ய ப்ரார்த்தனை கூடுமா கூடாதா? * பவந்தமேவாநுசரந் நிரந்தரம்...கதாஹமைகாந்திக நித்யகிங்கர: * நிந்ய கிங்கரோ பவாநி * இத்யாதிகளை நோக்குமிடத்து கைங்கர்ய பிரார்த்தனை கூடுமென்று விளங்காநின்றது. "திக்அசுசி மவிநீதம்...தவ பரிஜநபாவம் காமயே காமவ்ருத்த:" என்றதனால் அந்த கைங்கரிய ப்ரார்த்தனைக்காக ஆத்ம கர்ஹை செய்துகொண்டதை நோக்குமிடத்து கைங்கரிய ப்ரார்த்தனை கூடாதென்றே விளங்காநின்றது. ஸ்ரீவேதாந்தவாசிரியருங்கூட "த்வத் கிங்கரத்வ விபவே ஸ்ப்ருஹயா அபராத்யந்" என்று கைங்கர்ய ப்ரார்த் தனைக்குப் பூர்வபாவியான கைங்கர்யருசியையுங் கூட அபராத கோடியிலே வைத் துப் பேசியுள்ளார். அங்ஙனம் பேசினவர்தாமே கைங்கர்ய ப்ரார்த்தனையையும் பல பல ச்லோகங்களாலே செய்தருளியிருக்கின்றார். இவை பரஸ்பர விருத்தங் களாகத் தோன்றவில்லையா? உண்மையில் இரண்டும் சாஸ்த்ரார்த்தமேயென்று நிஷ்கர்ஷித்தாலொழிய வழி யில்லையன்றோ. கைங்கர்ய ப்ரார்த்தனையும் பண்ண வேணும்; 'ஸார்வபௌமனை நீசப் பெண் ஆசைப்படுமாபோலே ஐயோ! என்ன ஆசைப்பட்டோம்! இது தகுமா?' என்று உடனே நெஞ்சாறல் படவும் வேணும் என்று சாஸ்த்ரார்த்தம் சிக்ஷிதமாகிறது.

140. * ஒட்டுரைத் திவ்வுலகுன்னைப் புகழ்வெல்லாம் பெரும்பாலும் பட்டுரை யாய்ப் புற்கென்றே காட்டுமால் பரஞ்சோதி * (திருவாய்மொழி 3-1-2) என்று, பரஞ்சோதியான எம்பெருமானுக்கு உலகத்திலுள்ள க்ஷணபங்குரமான தாமரை, மேகம், காயாம்பூ முதலானவற்றை ஒப்பாகச் சொல்லுதல் இழிவு என்கிறாராழ்வார். இஃது உண்மையா அன்று? உண்மையாகில் 'கொண்டல் வண்ணா! கடல் வண்ணா!

http://acharya.org

காயா வண்ணா!' என்று பலகாலும் ஆழ்வார்கள் கதறுகின்றார்களே, இது என்ன? என்று ஆராயவேண்டாவோ? அன்றியும், பெரிய திருவந்தாதியில் *புகழ்வோம் பழிப்போம் புகழோம் பழியோம்* என்று எம்பெருமானை நாம் புகழ்வதானது பழிப்பதேயாகுமென்கிறார் நம்மாழ்வார். இப்படி சொல்லிக்கொண்டே மேன்மேலும் எம்பெருமானைப் புகழ்வதற்கே ஒருப்படுகின்றாரே, இது என்ன? என்று இதையும் ஆராயவேண்டாவோ? கூரத்தாழ்வான் அதிமாநுஷ ஸ்தவத்தில் "யா கம்ஸமுக்ய ந்ருபகீட நிபர்ஹணேத்தா ஸா நிர்ஜித த்ரிஜகதஸ் தவ நைவ கீர்த்தி:" என்று, கம்ஸன் முதலிய அரசர்களாகிற புழுக்களை ஸர்வேச்வரன் தொலைத்தானென்று சொல்லி அவனை யேத்துவதானது மூவுலகத்தையும் வென்றிருக்கிற அவனுக்குப் புகழ்ச்சியன்று. இகழ்ச்சியே என்று சொல்லிவைத்து அப்படிப்பட்ட கம்ஸவதம் முதலிய சரித்திரங்களையே மீண்டும் பேசிப் புகழ்கின்றாரே, இஃது என்ன? என்று இதையும் ஆராயவேண்டுமே. இங்ஙனே பல விஷயங்களுள்ளன. இவை ஒன்றுக்கொன்று அபவாதமாகுமோ? இவை யெல்லாம் பரஸ்பர விருத்தம் போல் தோன்றினாலும் உண்மையில் விருத்தமன்றே. இரண்டு படிகளும் சொல்லித் தீரவேண்டியவையத்தனையன்றோ? ஆத்ம ஸமர்ப்பணம் பண்ணுகையும் பின்பு அதற்கு அநுதபிப்பதாகப் பேசுகையுமாகிற இரண்டும் சாஸ்த்ரார்த்தமென்று அறுதியிட்டபின் இதில் ப்ரத்யாக்க்யாந ப்ரஸக்தி யுண்டோ?

141. முதலில் ஆத்ம ஸமர்ப்பணம் பண்ணிவிட்டுப் பிறகு அதற்கு அநுதாபம் காட்டுகிற ச்லோகத்தில் ஆளவந்தார் * "இதி ப்ரபுத்ததீ:" என்கிறார். கீழ் ச்லோகம் சொல்லும்போது [அதாவது ஆத்ம ஸமர்ப்பணம் பண்ணும்போது] தாம் அவிவேகியாயிருந்ததாகவும், உடனே விவேகம் பெற்று இந்த ச்லோகம் (அநுதாப ச்லோகம்) சொல்லுகிறதாகவும் இதனால் தெரிகிறது. ஏற்கெனவே மஹாவிவேக நிதியாகப் புகழ்பெற்ற ஆளவந்தார் முன் ச்லோகம் ஸாதிக்கும்போது அவிவேகியாயிருந்தார். பின் ச்லோகம் ஸாதிக்கும்போது விவேகம் பெற்றுவிட்டார் என்கை ஏலாது. அப்படியிருக்க "இதி ப்ரபுத்ததீ:" என்று ஸாதித்தது ஏன்? என்னில்; க்ரமேண சாஸ்த்ரார்த்தங்களை வெளியிடவேண்டுமிடத்து இங்ஙனே சொல்லுவது க்ரந்தசைலி—என்பதுதான் பரமார்த்தம். இன்பமிகு மாறாயிரமருளிச்செய்த திருக்குருகைப் பிரான் பிள்ளானும் *எனதாவியுள் கலந்த பாசுர வியாக்கியானத்தில்—"இப்படி எம்பெருமானோடு கலந்த கலவியாலுள்ள நிரவதிக ப்ரீதியாலே அறிவழிந்து இவ்வாத்மா தம்முடையதன்றென்று நிருபிக்கமாட்டாராய் அவன் தம்மோடு கலந்த இப்பெருநல்லுதவிக்குக் கைம்மாறாகத் தம்முடைய ஆத்மாவை அவனுக்கு மீளா வடிமையாகக் கொடுத்து, பின்னையும் தம்முடைய ஸ்வரூபத்தை உள்ளபடி விவேகித்து" என்றருளிச்செய்தார். அவ்விடத்திற்கும் இதுவே நிர்வாஹம். ஆகவே, முந்துற ஆத்ம ஸமர்ப்பணம் பண்ணுகையும் பின்னை அதற்காக அநுசய ப்ரகாசனம் பண்ணுகையுமாகிற விரண்டும் பரஸ்பராபவாதமல்லாத சாஸ்த்ரார்த்த மென்றதாயிற்று. ஆத்ம ஸமர்ப்பணம் பண்ணவேணுமென்பதும் சாஸ்த்ரார்த்தமாக ஆய்விட்டபடியாலே அந்த ஆத்ம ஸமர்ப்பணத்தை நாம் எப்போது செய்கிறோம் என்று ஒரு சிறிய கேள்வி தோன்றும்; இதைப்பற்றி வேதாந்த வாசிரியரே ஸுவ்யக்தமாகத் தெரிவித்துள்ளார். ரஹஸ்யத்ரயஸாரத்தில் க்ருதக்ருத்யாதிகாரத்தில்.... "பகவத்க்ருபைபடியாகவுண்டான ஸதாசார்ய கடாக்ஷ விஷயீகாரத்தாலே வந்த த்வயோச்சாரண அநூச்சாரணத்தாலே ப்ரபத்தியனுஷ்டானம் பிறந்தபின்பு சரண்ய ப்ரஸாதகங்களில் இதுக்குமேல் ஒன்றில்லாமையாலே" இத்யாதி ஸ்ரீ ஸூக்திகளிருப்பது ப்ரஸித்தம். இந்த வாக்கியத்தில் "த்வயோச் சாரண அநூச்சாரணத்தாலே ப்ரபத்த்யநுஷ்டானம் பிறந்த பின்பு" என்று ஸாதித்திருப்பதொன்றே தெளிவு பிறப்பிக்குமது. பஞ்சஸம்ஸ்கார காலத்தில் ஆசார்யன் த்வயத்தை உபதேசிக்குமளவில் அவர் உச்சரிக்க, சிஷ்யன் அநூச்சாரணம் பண்ணுவதனால் ப்ரபத்தியநுஷ்

http://acharya.org

டானம் பிறந்ததென்று தேறிற்று. த்வயத்தின் பொருள் நெஞ்சில் ஊறவூற த்வயார்த்த ப்காசகமான திருவாய்மொழிப் பாசுரங்கள் ஆசார்ய ஸ்ரீ ஸூக்திகள் இவற்றின்பொருள் நெஞ்சில் தேங்கத் தேங்க, அதுவே பழுத்த ஆத்ம ஸமர்ப்பண மாகத் தலைக்கட்டுமென்று ஸதாசார்யோபதேசம். .... .... *

142. ப்ரபத்தியொழிந்த மற்றை யுபாயங்கள் உபாயாந்தரங்க ளெனப்படும். உபாஸநம் முதலான அவற்றிலே ப்ரபந்நர்களான நமக்கு ப்ராப்தியில்லையென்பது ஸர்வஸம்ப்ரதிபந்நம். சாஸ்திரங்களில் விதிக்கப்பட்டுள்ள அந்த உபாயாந்தரங்களை நாம் விடுகைக்கு ஹேது என்ன? என்கிற விசாரத்தில், அவற்றை (உபாயாந்தரங் களை) அறிகைக்கும் அநுஷ்டிக்கைக்கு மீடான ஜ்ஞாந சக்திகளில்லாமையே ஹேது என்பர் ஒருசாரார். அவையன்று ஹேது, பகவானுக்கு அத்யந்தம் பரதந்த்ரப்பட் டிருக்கையாகிற ஸ்வரூபத்துக்குச் சேராதென்னு மதுவே முக்ய ஹேதுவென்று ஸதாசார்யர்களின் ஸித்தாந்தம். அஜ்ஞானமும், அசக்தியுமடியாக விடுவதானால், ஜ்ஞான சக்திகளுண்டாகில் அவற்றைப் பரிக்ரஹிக்கவேண்டிவருமன்றே; ஸ்வரூப விரோதமென்று விட்டாலன்றே மறுவலிடாதொழிவது. ஆகவே ஸ்வரூப விருத்த மென்னுமதுவே ப்ரதாந ஹேதுவாகும்.

143. உபாயாந்தரங்களும் மோக்ஷோபாயமாயிருக்க அவற்றைக் கழிக்க லாமோ? அவை யார்க்கு உபாயம்? என்னில், ஸ்வரக்ஷணத்தில் ஸ்வப்ரயத்ந நாற்றத் தையும் ஸஹியாத ஸ்வரூபத்தை உள்ளபடி யறிகைக்கீடான ஞானமில்லாதவர் களுக்கே அவை உபாயமாயிருக்கும். ஸ்வரூப யாதாத்மிய ஜ்ஞான முடையவர் களுக்கு அபாயமாயே யிருக்கும். அத்யந்த பாரதந்த்ர்யமாகிற ஸ்வரூபத்துக்கு ஸ்வப்ரயத்நரூபமான அவை நாசகமாகுமன்றே.

144. நம்மாழ்வார் பெரிய திருவந்தாதியில் (6) *நெறிகாட்டி நீக்குதியோ நின்பால்* என்றருளிச்செய்த பாசுரத்தின் பொருளைக் கேளீர். நெறியென்றால் வழி; வழியாவது உபாயம். பகவத்கீதையில் சரம ச்லோகத்திற்குக் கீழே விரிவா கச் சொல்லப்பட்டுள்ள ஸாதநாந்தரங்களை இங்கு நெறி யென்கிறது. எம்பெருமான் யாரை அநுக்ரஹிக்கத் திருவுள்ளம் பற்றுகிறானோ அவர்களை நோக்கி 'நீங்கள் எவ்விதமான அலைச்சலும் படவேண்டா; என்னையே தஞ்சமாக உறுதிகொண்டு மார்விலே கைவைத்து உறங்குங்கள்' என்பன். எவர்களைக் கைவிட நினைக்கிறானோ அவர்களுக்கு அருந்தொழில்களை அளவில்லாதபடி விதித்து 'இவற்றைச் செவ்வனே செய்து பேறு பெறுங்கள்' என்பன். ஆகவே நெறி காட்டுகையென்பதும் நீக்குகை யென்பதும் பர்யாயம். நெறியைக் காட்டுகையாவது, 'இது கர்ம யோகம், இது பக்தியோகம்; இவற்றுள் எது உமக்கு ஸாத்தியமோ அதனை அநுஷ்டிக்கக் கடவீர்' என்று சொல்லித் தான் உதாஸீநனாகை. (நெறி காட்டி நீன்பால் நீக்குதியோ) உன்னை யொழிய வேறோருபாயத்தைக் காட்டி உன் பக்கலில் நின்றும் என்னை அகற்றப் பார்க்கிறாயோ வென்று ஆழ்வார் எம்பெருமானை நோக்கிக் கேட்கிறபடி. நள மஹாராஜன் தமயந்தியை உடுத்த புடவையிலே ஒரு தலைப்பை யறுத்து 'இது விதர்ப்பதேசம் போகிறவழி, இது கோஸலதேசம் போகிறவழி; எந்த வழியில் வேணுமானாலும் போய்க்கொள்' என்று சொல்லிவிட்டு அகன்றாப்போலே அகலப் பார்க்கிறாயோ? என்று வினவுகிறபடி. ஆக இப்பாசுரத்தால், உபாயாந்தரங்களில் அந்வயிக்கை எம்பெருமான் பக்கலில் நின்றும் அகல்வதற்குறுப்பு என்று தேறி நின்றது. *நெறிகாட்டி நீக்குதியோ* என்ற விடத்தில் நீக்குகையாவது பரதந்த்ர மான வஸ்துவை ஸ்வதந்த்ரக்ருத்யமான உபாயாநுஷ்டானத்திலே மூட்டித் தனக்கு அசலாக்குகையென்று மணவாளமாமுனிகளின் திருவாக்கு.

http://acharya.org

145. திருக்குருகைப்பிரான் பிள்ளான் பணிப்பதொரு வார்த்தையுண்டு; அது ஸ்ரீவசநபூஷணத்திலே வ்யக்தம். "மதிராபிந்து மிச்ரமான சாதகும்பமய கும்பகத தீர்த்த ஸலிலம் போலே அஹங்காரமிச்ரமான உபாயாந்தரம்" என்று பிள்ளான் பணிப்பராம். பொற்குடத்திலிருக்கும் தீர்த்த ஜலமானது, பாத்ரசுத்தியு முண்டாய் தானும் பரிசுத்தமாயிருக்க, மத்யபிந்துவின் கலப்பினாலே நிஷித்தமாகிறாப்போலே, ஸ்வதோ நிர்மலத்வாதிகளாலே பரிசுத்தமாயிருக்கின்ற ஆத்மவஸ்துவிலுள்ளதாய், பகவானையே பற்றியதாதலால் பரிசுத்தமாயிருக்கின்ற உபாயாந்தரமானது ஸ்வயத்ந மூலமான அஹங்காரஸ்பர்சத்தாலே ஜ்ஞானிகள் அங்கீகரியாதபடி நிஷித்தமாயிருக்கும் என்பது மேற்குறித்த பிள்ளான் திருவாக்கின் தாற்பரியம். "அஹங்கார மிச்ரமான உபாயாந்தரம்" என்ற இவ்வாக்கியத்தில் கூறும் அஹங்காரமாவது இன்னதென்று தெளியவேணும். தானே கர்த்தாவென்றும் தானே போக்தாவென்றும் அநுஸந்திப்பதுதான் இங்கு அஹங்காரமாவது. கீதையில் பதினெட்டாவது அத்யாயத்தில் (6, 9 ச்லோகங்களில்) * ஸங்கம் த்யக்த்வா * என்று உபாயாந்தர நிஷ்டனுக்குச் சொன்ன அஹங்காரத்யாகமாவது—ஸ்வதந்த்ரனாக நான் கர்த்தா போக்தா என்கிற ஸ்தூலாஹங்காரத்யாகம். ஆயினும் அவனுக்கு ஸூக்ஷ்மாஹங்காரமொன்று அவர்ஜநீயமாயுண்டு. அது ஸ்வயத்நரூபத்வ நிபந்தநம். அதுவும் நிஷித்தமென்று பிள்ளானுடைய திருவுள்ளம். இது எங்ஙனே தெரிகின்றதென்னில், அவரது திருவாக்கில் "மதிராமிச்ரமான" என்னாதே "மதிரா பிந்து மிச்ரமான" என்று காண்கையாலே அந்த பிந்துபதத்தினால் இது தெரிகின்றது. கெடுப்பதற்கு அணுவளவும் போதுமாதலால், உபாயாந்தர ப்ரவ்ருத்தியில் ஸூக்ஷ்மாஹங்காரமுண்டாகி அதுதான் அவர்ஜநீயமாயிருந்து அது அற்பமானாலும் ஸ்வரூப நாசகத்வத்தில் குறையற்றதென்று காட்டினபடி.

146. வேதாந்த வாசிரியருடைய ந்யாஸதிலகத்தில் "ஆர்த்தேஷ் வாசுபலா" என்று தொடங்கும் சுலோகத்தில் ப்ரபத்திக்கு இட்டிருக்கிற விசேஷணங்களத்தனையும் பக்திவ்யாவர்த்தகங்கள். விவரித்துக் காட்டுகிறோம் காண்மின்; (ஆர்த்தேஷ்ᵘ ஆசுபலா) பக்தியானது விளம்பித்துப் பலனளிக்கும்; ப்ரபத்தி அங்ஙனன்றிகடுக விரைவில் பலனளிக்கும்—ஆர்த்தப்ரபந்நர்திறத்தில். (தத்ந்யவிஷயேபி உச்சிந்ந தேஹாந்தரா) பக்தியானது தேஹாந்தர ஸம்பந்தத்தை யறுத்துத்தருவதில் நியதியுடையதன்று; ப்ரபத்தி நியமேந தேஹாந்தர ஸம்பந்தத்தை யறுத்துத் தரும். (வஹ்ந்யாதே: அநபேக்ஷணாத் தநுப்ருதாம் ஸத்யாதிவத் வ்யாபிநீ) பக்தியாகிற உபாயத்தின் அநுஷ்டானத்தில் அக்நிகார்யம் முதலியவை அபேக்ஷிதமாயிருக்கையாலே அது அதிக்ருதாதிகாரமாயிருக்கும்; ப்ரபத்தியில் அவ்வபேக்ஷையில்லாமையாலே ஸத்யம் சொல்லுவதற்கு எப்படி ஸர்வரும் அதிகாரிகளோ அப்படியே ப்ரபத்தியிலும் ஸர்வரும் அதிகாரிகள். இனி இதற்கு அடுத்த விசேஷணமே ப்ரக்ருத விஷயத்திற்கு உற்று நோக்கத்தக்கது. (யாவதாத்ம நியத த்வத் பாரதந்த்ர்யோசிதா) ப்ரபத்தி ஸ்வரூபாநுரூபம் என்கிறது. யாவதாத்மநியதமான அத்யந்த பாரதந்த்ர்யத்துக்கு ப்ரபத்தி உசிதமாயிருக்குமென்றபோதே ப்ரபத்திப்ரதிகோடியான பக்தியானது அந்த பாரதந்த்ரியத்திற்கு விருத்தமாயிருக்குமென்னுமிடம் ஸ்பஷ்டமாகத் தெரிவிக்கப்பட்டதாயிற்றன்றே. .... .... .... *

147. க்ருஹஸ்தாச்ரம தர்மமாக விஹித விஷய போகம் ப்ராப்தமானாலும், அநந்யார்ஹ சேஷத்வ அநந்ய சரணத்வங்களோடுகூட அநந்ய போக்யத்வமென்கிற விலக்ஷணமான தன்மையையும் பெற்றிருக்கின்ற விசேஷாதிகாரிக்கு அந்த விஹித விஷய போகம் அருவருக்கத்தக்கதாய் விடத்தகுந்ததேயாகுமென்பது ஸதாசார்ய ஸித்தாந்தம். சாஸ்த்ரங்களில் ஸ்வதாரபோகம் நியமமாக விதிக்கப்பட்டு அது தவிர்ந்தால் தோஷமும் ப்ரதிபாதிக்கப்பட்டிருக்கையாலே விஹிதவிஷய நிவ்ருத்தி

http://acharya.org

அசாஸ்த்ரீய மென்பாருளர். ஸ்ரீவசநபூஷணத்தில் இரண்டு மூன்றிடங்களில் உத்தமாதிகாரிக்கு விஹிதவிஷய நிவ்ருத்தியைத் தன்னேற்றமாக அருளிச்செய்கிறார். மிகுஞானச் சிறுகுழவியான எம்பெருமான் சோதிவாய் திறந்து பணித்த கீதையில் (8-3) எட்டாவது அத்தியாயத்தில் மூன்றாவது ச்லோகத்தின் பாஷ்யத்தில் ஸ்ரீ பாஷ்யகாரர் வெளியிட்டருளின விசேஷார்த்தமிது. கீழ் ஏழாவது அத்யாயத்தின் முடிவில் கண்ணபிரான் * ஜராமரண மோக்ஷாய * என்கிற இருபத்தொன்பதாம் ச்லோகத்தில் "தே ப்ரஹ்ம தத் விதுঃ க்ருத்ஸ்நம் அத்யாத்மம் கர்மசாகிலம்" என்று ஒருவார்த்தை சொன்னான். அதுகேட்ட அர்ஜுநன் அந்த வார்த்தைக்கு உண்மையான பொருளைத் தெரிந்துகொள்ள வேண்டிக் கண்ணனையே கேள்வி கேட்கிறான் எட்டாவது அத்தியாயத்தின் 1, 2-ச்லோகங்களினால். "கிம் தத் ப்ரஹ்ம கிமத்யாத்மம் கிம் கர்ம புருஷோத்தம" என்று தொடங்கிக் கேள்விகள் உள்ளன. மூன்றாவது ச்லோகம் தொடங்கிக் கண்ணபிரானுடைய விடை வெளிவருகின்றது. கிம் கர்ம? என்ற கேள்விக்குக் கண்ணபிரானுடைய விடை "பூதபாவோத்பவகரோ விஸர்க்க: கர்மஸம்ஜ்ஞிதঃ" என்பது. இங்கு விஷயமென்னவென்றால், சிலவற்றை அறியவேண்டும் என்று பகவான் நியமித்துவருகையில் கருமத்தை அறியவேண்டும் என்று சொல்லியிருந்ததனால் கருமமென்றால் எது? என்று அர்ஜுநன் கேட்க நேர்ந்தது. அதற்கு பகவான் விடை கூறியுள்ளார். ஒருவன் ஒன்றை யறிவதானது, பற்றுவதற்காகவும் ஆகலாம் விடுவதற்காகவும் ஆகலாம். நல்லதாயிருந்தால் பற்றுவது, கெட்டதாயிருந்தால் விடுவது. ஆகவே நல்லதையும் தெரிந்துகொள்ள வேண்டும் கெட்டதையும் தெரிந்துகொள்ள வேண்டும். இங்கே தெரிந்துகொள்ள வேண்டியதாகக் கூறப்பட்ட கருமம் நல்லதன்று, கெட்டது. என்பதாக பகவானுடைய விடையினால் தெரிகிறது. "பூதபாவோத்பவகரோ விஸர்க்க: கர்மஸம்ஜ்ஞிதঃ" என்பதற்கு நம்முடைய ஸ்ரீ பாஷ்யகாரர் அருளிச்செய்திருக்கிற பங்க்திகளின் கருத்து; ஸ்த்ரீ புருஷஸம்யோக மென்பதுதான் இங்கே கருமமென்கிறது. இது மிகவும் அருவருக்கத்தக்கதாகையால் விடத் தக்கதாக இதனை யறியவேண்டும். இதை விடவேண்டுமென்பது மேலே பதினோராவது சுலோகத்திலும் காட்டப்படுகிறது என்பதாம். இதனால் நாம் தெரிந்துகொள்வது, க்ருஹஸ்தாச்ரம தருமமாக விஹிதவிஷயபோகம் ப்ராப்தமே யானாலும் அது விசிஷ்டாதிகாரிக்கு ஜுகுப்ஸநீயமே யென்று. ஆகவே இவ்விஷயத்தில் ஸ்ரீ வசநபூஷண ஸித்தாந்தம் நிரவத்யமே.

148. இதர ஸம்ப்ரதாயத்தில் கர்மாநுஷ்டானப்பற்று அதிகமாகவும் ஸத்ஸம்ப்ரதாயத்தில் அது குறைவாகவுமுள்ளது. "க்ரியமாணம் ந கஸ்மைசித் யதார்த்தாய ப்ரகல்பதே, அக்ரியாவதநர்த்தாய தத் து கர்ம ஸமாசரேத்" என்கிற பிரமாணத்தை வேதாந்த வாசிரியரும் எடுத்தாளுகிறார். இந்த பிரமாண வசனத்தின் படியேதான் ஸதாசார்யர்களின் அநுஷ்டான பரம்பரை காண்கிறது. எந்தக் கருமத்தைச் செய்தால் ஒரு பலனும் கிடைக்கமாட்டாதோ, செய்யாவிடில் ப்ரத்யவாயம் விளையுமோ அந்தக் கருமத்தை மாத்திரம் செய்யவேண்டியதென்று இந்த வசனத்தின் தாற்பரியம், அதாவது—அகரணே ப்ரத்யவாயாவஹமாயும் பலச்ருதியற்றதாயுமிருக்கிற கருமத்தையே செய்யக்கடவதென்றபடி. ஸதாசார்ய ஸம்ப்ரதாய பரம்பரையில் எந்தெந்த கருமங்கள் அநுஷ்டிக்கப்பட்டு வருகின்றனவோ அவை அகரணே ப்ரத்யவாயத்தை விளைப்பனவாயிருக்கும். எந்தெந்த கருமங்கள் அனுட்டிக்கப்படாமல் விடப்பட்டிருக்கின்றனவோ அவை ஸாமாந்ய பலப்ரதமாயிருக்கும்—என்று அறியக் கடவது ஒவ்வொரு ஸௌரமாஸ ஸங்க்ரமணத்திற்கும் தர்ப்பணம் அனுட்டியாமல் நான்கு மாதப்பிறப்புகளுக்கே அது அனுட்டிப்பது இந்த ஸம்ப்ரதாயத்திலுள்ளது. இத்தகைய அநுஷ்டாந—அனநுஷ்டானங்களை இங்கே நிதர்சனமாகக் கண்டுகொள்வது. .... .... ... *

http://acharya.org